வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.01.2024 வியாழக்கிழமை | இதழ் : 04 | பக்கங்கள் : 16






# தமிழரசின் தலைமைக்கு சிறீதரனே தகுதியானவர்!

## விக்னேஸ்வரன் எம். பி. கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஜனவரி 04

இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரனே பொருத்தமானவர் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தலைவர் ஆவதற்கான தகுதிகள் சுமந்திரன் எம். பிக்கு இருந்தாலும் அவர் மற்றவர்களுடன் இணைந்து செயல்படக்கூடியவர் இல்லை என்றும் கூறியுள்ளார்.

11



## அரசுடன் சேர்ந்து பணியாற்ற தமிழ் எம். பிக்கள் வரவேண்டும்

### ஜனாதிபதி ரணில் அழைப்பு

கொழும்பு, ஜன. 04

வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். அப்போதுதான் பொருளாதார தீர்வையும் - அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென்றெடுக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள்

11

போதை ஒழிப்பு நடவடிக்கையில்:

## யாழ். பொலிஸாரின் செயல்கள் அதிருப்தி, சந்தேகம் தருகின்றன!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஜன. 04

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸாரின் நடவடிக்கைகளும் அணுகு முறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றன என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மக்களின் பிரச்னைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி பணிமனையின்



பிரதானி சாகல ரத்நாயக்கவுடன் சூம் செயலி மூலம் அமைச்சர் டக்ளஸ்

11

## இன்று யாழ். வருகிறார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு வருகை தருகிறார். இதில், முதல் பயணமாக அவர் இன்று வியாழக்கிழமை யாழ்ப் பாணம் வருகிறார். இங்கு பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்கும் அவர் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத் தில் நடைபெறும் அபிவிருத்தி

11

## உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 04

க. பொ. த. உயர்தரப் பரீட்சை இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகிறது.


ஜனவரி 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு 2 ஆயிரத்து 302 பரீட்சை நிலையங்கள் ஊடாக 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பேர் தோற்றவுள்ளனர். இதேநேரம், 319 ஒருங்கிணைப்பு மையங்களும் இந்தப் பரீட்சைக்காக அமைக்கப்பட்டுள்ளன.

உயிரியல் பாடத்துக்கு 58 ஆயிரத்து 981 பேரும் கணித பாடத்துக்கு 43 ஆயிரத்து 712 பேரும் வணிகவியல் பாடத்துக்கு 69 ஆயிரத்து 77 பேரும் கலை பாடத்துக்கு ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 924 பேரும் பொறியியல் தொழில் நுட்பத்துக்கு

11

## கச்சதீவு இலங்கைக்கே சொந்தம்!

### தமிழ்நாட்டில் ஜீவன் தெரிவிப்பு



சென்னை, ஜன. 04

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது என்று தமிழ்நாட்டில் வைத்து தெரிவித்துள்ளார் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரான ஜீவன் தொண்டமான்.

அண்மையில் காலமான தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் நிறுவுநரும் நடிகருமான விஜயகாந்தின் நினைவிடத்தில் ஜீவன் தொண்டமான்

11

## மின்சார சபையினர் போராட்டம்!

கொழும்பு, ஜன. 04

இலங்கை மின்சார சபையை தனியார்மயப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று புதன்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள மின்சார சபையின் பிரதான பணிமனை முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் இலங்கை மின்சார சபையை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு விற்பனை செய்யவுள்ளதாக சில தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

11

## ரணிலுக்கு எதிராக போராட்டம்: தடைவிதிக்க நீதிமன்று மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்கும் விதமாக பொலிஸார் 8 பேருக்கு எதிராக தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டத்தை மீறாத வகையில், ஜனநாயக ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கான உரிமை அனைவருக்கும் உள்ளது என்று நீதிமன்றம் இதன்போது

11

## டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயத்தில் மன்னார்!

### பிராந்திய சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

மன்னார், ஜன. 04

திண்ம கழிவகற்றல் பிரச்னைக்கு விரைவில் ஒரு நிரந்தர தீர்வு எட்டப்படாதுவிடின் மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரிக்கலாம். அத்துடன், தண்ணீர், உணவுகள் வழியே பரவும் நோய் தொற்றும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. விநோதன் எச்சரித்துள்ளார்.

மன்னார் நகர சபையின் திண்ம கழிவகற்றல் செயல்பாடு ஒழுங்கான முறையில்

11

## மதுபானசாலையை அகற்றுமாறு உடுப்பிட்டியில் நேற்று போராட்டம்!

### ஐநூறுக்கும் மேற்பட்டோர் திரள்வு

வடமராட்சி, ஜன. 04

உடுப்பிட்டியில் மீளவும் திறக்கப்பட்ட மதுபான சாலையை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்று புதன் கிழமை அந்தப் பகுதியில் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதனுடன், இணைந்ததாக நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

உடுப்பிட்டி

11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தல் பற்றிய கவனம் இப்போது சூடுபிடித்திருக்கின்றது. அதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது. தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் எல்லோரும் எப்படி மக்களின் ஆதரவைப் பெறுவது என்பதை விட எப்படி வெளிநாடுகளின் ஆதரவைப் பெறுவது என்பதிலேயே அதிக கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

ஒரு நண்பரிடமிருந்து குறுந்தகவல் ஒன்று வந்தது. அது ஒரு செய்திக் குறிப்பு.

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவு ஒருவருக்கே என்றும் அவரையே அந்தக்கட்சி விரும்புகின்றது எனவும் சொன்னது அந்தக் குறிப்பு.

அது எங்கிருந்து பெறப்பட்டது என்பதோ அல்லது யார் அதனை எழுதினார்கள் என்பதோ அதில் இல்லை. எனக்கு அனுப்பிய நண்பரிடம் கேட்டேன், 'யார் இதனை உங்களுக்கு அனுப்பியது?' என்று.

அவர் தனக்கு ஒரு நண்பர் அனுப்பியதாகவும் அவருக்கும் அவரது நண்பர்தான் அனுப்பியிருக்கிறார். ஆனால், அதன் மூலம் எங்கிருந்து தொடங்கியது என்பதை அறியமுடியவில்லை - என்றார்.

அதன் மூலத்தைக் கண்டறிய இந்த ஊர்க்குருவி சுழியோடி போது கிடைத்த தகவல்கள் சுவாரஸ்யமானவை.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் இரண்டு இந்தியர்கள் தங்களை ஆளும் பாரதிய ஜனதா கட்சியுடன் நெருக்கமானவர்கள் என்று அறிமுகம்செய்து கொண்டு உலா வருகிறார்களாம்.

ஜனாதிபதி தேர்தலை குறிவைத்திருக்கும் ஒரு வர்த்தகரை அணுகிய இவர்கள் இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதரவை பெறுத்தருவதாக அவருடன் பேரம்பேசி, அவரது விருந்தினராகவே மாறியிருக்கின்றனராம்.

அவர்களே இந்தச் செய்தியை தயாரித்து, ஊடகங்களுக்கு அனுப்பியிருக்கின்றனர். குறிப்பாக அது கிடைத்த இந்திய ஊடகங்கள் எதுவும் அதன் உண்மைத் தன்மையை அறிந்து கொண்ட பின்னர் அதனைக் கண்டு கொள்ளவில்லையாம். ஆனாலும் அந்த செய்தி அறிக்கையை சமூக வலைத் தளங்களில் உலாவ விட்டிருக்கின்றனர்.

நேற்றைய தினமே இன்னுமொரு செய்தியும் பகிரப்பட்டு வருகின்றது.

அது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் செய்தி அறிக்கை.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளராக சம்பிக்க பாட்டலி ரணவக்கவுக்கு சந்திரிகா குமாரதுங்க ஆதரவு என்றிருந்தது அந்த அறிக்கை.

'இலங்கையின் அரசியல் நிலப்பரப்பை மறுவடிவமைக்கும் நோக்கில் ஒரு மூலோபாய நடவடிக்கையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக சம்பிக்க பாட்டலி ரணவக்கவை உத்தியோகபூர்வமாக முன்வைத்துள்ளார்.

அனுபவமிக்க அரசியல்வாதியும் முன்னாள் ஜனாதி பதியுமான சந்திரிகா பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து தேசத்தை வழிநடத்துவதற்குத் தேவையான பண்புகளை சம்பிக்க ரணவக்க கொண்டிருப்பதாக நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

அவர் சம்பிக்கவை முன்நிறுத்துவதற்கு முதன்மையான காரணங்களில் ஒன்று, இடதுசாரி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கட்சியை திறம்பட எதிர்க்கும் அவரது திறன் என்கிறார்.

சந்திரிகா குமாரதுங்க ஒரு மூத்த அரசியல்வாதி, சிக்கலான அரசியல் நிலப்பரப்பில் செல்லக்கூடிய மற்றும் எதிரெதிர் சித்தாந்தங்களுக்கு ஒரு வலிமையான சவாலை வழங்கக்கூடிய ஒரு வேட்பாளரின் தேவையை வலியுறுத்தியிருக்கிறார்.

அதேவேளை, சம்பிக்க பாட்டலி ரணவக்க, இளைய தலைமுறையினரின் அபிலாஷைகளுடன் எதிரொலிக்கும் அரசியல் தலைவராக தனக்கென தனி இடத்தைப் பிடித்துள்ளார் என்றும் முற்போக்கான பார்வை மற்றும் இளைஞர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான அர்ப்பணிப்புடன் ரணவக்க இளம் வாக்காளர்கள் மத்தியில் கணிசமான புகழைப் பெற்றுள்ளார்' எனவும் குறிப்பிட்டிருக்கிறார் சந்திரிகா.

தூய்மையான நிர்வாகத்திற்கான அர்ப்பணிப்புக்காக அறியப்பட்டவர் சம்பிக்க என்றும் சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தியை படித்ததும் அவரையறிந்த ஒருவரை தொடர்புகொண்டு கேட்ட போது, அவர் சொன்னார்:

சம்பிக்க தனது கட்சியின் பெயரை குடியரசு முன்னணி என்று மாற்றியதன் பின்னணியிலும் சந்திரிகாவே இருந்தாரெகலும் அமெரிக்க குடியரசு கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் குடியரசு இன்ஸ்ரிரியூட் என்ற சிந்தனை குழுமமே அதன் பின்னால் இருப்பதாகவும் அவர் சொன்னது ஆச்சரியத்தைத் தரவில்லை.

இப்போதெல்லாம் நமது நாட்டில் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதில் நமது நாட்டு மக்களை விட வெளி நாடுகளே அதிக கவனத்தை செலுத்தி வருகின்றன.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பார்கள். ஆனால், நமக்கு வழிபிறக்கிறதோ இல்லையோ ஊடகங்களுக்கு இனி தீனி கிடைக்கப்போகின்றது என்பது மட்டும் தெரிகின்றது.!

- ஊர்க்குருவி.

# அரசினால் அறவிடப்படும் வரிகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியம்!

### அஜித் மன்னப்பெரும எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 04

மக்களிடம் வசூலிக்கும் வரிப்பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பது தொடர்பில் முழுமையான அறிக்கையை மக்களுக்கு வழங்குமாறு கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் அறவிடப்படும் வரிகள் எவ்வாறு செலவிடப்படுகின்றன என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவான நம்பகத்தன்மை இல்லாத காரணத்தினால் இது தொடர்பில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த இவ்வாறான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது காலத்தின் பொருத்தமானது என சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறான வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தினால் மக்கள் வரி செலுத்தும் முறைக்கு மிகவும் இணக்கமாக இருப்பார்கள்.

வரிப்பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பது தொடர்பில் பத்திரிகை விளம்பரம் அல்லது நிதியமைச்சரின் அறிக்கை மூலம் மக்களுக்கு தெரியப்படுத்த முடியும்-என்றார். (அ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் 100 குடும்பங்களுக்கு உலருணவு

கிளிநொச்சி, ஜன. 04

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் 100 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையம், சுழிபுரம் றோட்டரக்ட் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 100 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியா ரென் போர் தமிழ் அமைப்பின் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி அனுசரணையில் குறித்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.




மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி உதயநகர் மேற்கில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் முல்லைத்தீவு மன்னாகண்டல் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உலருணவுகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலைய உறுப்பினர்கள், சுழிபுரம் றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள், கிராம சேவகர்கள், பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# கட்டாயம் வரி செலுத்துவோர் குறித்து நிதி அமைச்சு விளக்கம்

கொழும்பு, ஜன. 04

வரி அடையாள எண் அல்லது ரின் இலக்கத்தை பெறுவதனால் மாத்திரம் எவரும் தன்னிச்சையாக வருவான வரி விதிப்பிற்கு உள்ளாகமாட்டார்கள் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

வருடாந்த வரி விலக்கு வரம்பான 1.2 மில்லியன் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு மட்டுமே வரி செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் நடைமுறை கணக்கொன்றை ஆரம்பிக்கும் போதும், கட்டடத் திட்டங்களுக்கு அனுமதி பெறும் போதும், வாகன பதிவின் போதும், அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் போதும், நில உரிமை பதிவின் போதும் வரி அடையாள எண்ணை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# உர கொடுப்பனவிற்கான நிதி ஒதுக்கீடுகள் நிறைவு

கொழும்பு, ஜன. 04

பெரும்போகத்தில் உரக் கொள்வனவிற்காக விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு நிறைவடைந்துள்ளது.

இதற்காக மேலும் 2,000 மில்லியனை திறைசேரியிடமிருந்து கோரியுள்ளதாக திணைக்களம் தெரிவித்தது.

இந்த நிதி கிடைத்ததும் உடனடியாக அதனை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கமநல அபிவிருத்தி திணைக்களம் கூறியது.

தற்போது வரை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 500 கோடி ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

5 லட்சத்து 83 ஆயிரத்து 372 விவசாயிகளுக்கு இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் 50 வீதமானோருக்கு மாத்திரமே இது வரை கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# கீரி சம்பா அரிசி இறக்குமதிக்கு தனியார் துறையினருக்கு அனுமதி!

கொழும்பு, ஜன. 04

கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்காக தனியார் துறைக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினூடாக அரிசியை இறக்குமதி செய்தால், கொள்முதல் நடவடிக்கைகளுக்கு அதிக காலம் செல்லும் என அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த அரிசி தொகை விரைவில் கிடைக்கும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கீரி சம்பா அரிசி இறக்குமதி அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

ஈழநாடு
Eelanadu
04.01.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுரகுமார கூறுவதன் பொருள் என்ன?

எமது நேற்றைய தலையங்கத்தில் ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறான வெளித்தலையீடுகள் இடம்பெறலாம் என்பது தொடர்பில் குறிப்பிட்டிருந்தோம். தேசிய மக்கள் சக்தியின் (முன்னாள் ஜே. வி. பி.) தலைவர் அநுர குமார திஸநாயக்க எமது கணிப்பை சரியென்று உறுதிப்படுத்தும் வகையில் பேசியிருக்கின்றார். அதாவது, நாட்டில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் இலங்கை அரசியல் அரங்கில் முன்னெப்போதும் இல்லாதவாறான - உக்கிர மான போரை உருவாக்குமென்று - அவர் குறிப்பிட்டிருக்கின்றார். தற்போது இலங்கைத் தீவில் உருவாகியுள்ள அரசியல் முகாம்களும் பிளவுகளும் சாதாரணமானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறான பிளவுகளும் அதன் மீது வெளித்தரப்புகள் - குறிப்பாக தேர்தல்களில் சீனாவின் தலையீடுகள் எவ்வாறானதாக அமையுமென்னும் வகையிலேயே நாம் சில விடயங்களை நேற்றைய தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். 'ஈழநாடு' தொடர்ந்தும் சில விடயங்களை எதிர்வுகூறி வந்திருக்கின்றது. அவற்றை அரசியல் கட்சிகளின் தலைமைகள் கருத்தில் கொண்டிருந்தால் பல மாற்றங்களை மக்கள் கண்டிருப்பர். ஆனால், நமது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைமைகளோ தொடர்ந்தும் பழைய சுலோ கங்களிலேயே சுகம் கண்டு கொண்டிருக்கின்றன.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர்தான் தேர்தல் தொடர்பில் சிந்திக்கும் - இறுதி நேரத்தில் ஏதாவது ஒரு வேட்பாளரை ஆதரிப்பதாக அறிவிக்கும். இது தொடர்பில் 'ஈழநாடு' தொடர்ச்சியான சில விடயங்களை வலியுறுத்தி வந்திருக்கின்றது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு - அதேவேளை தந்தி ரோபாய அடிப்படையிலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

கோட்டாபய ராஜபக்ஷ தனிச் சிங்கள வாக்குகளில் வெற்றிபெற்றதும் ஒரு சிங்கள - பௌத்த அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான - முக்கியமாக, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக சட்டமாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தை நிரந்தரமாக இல்லாமலாக்கும் நோக்கில் செயல்பட்டதும் - இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டில் ஏற்பட்ட வங்குரோத்து நிலையும் - அதனைத் தொடர்ந்து இலங்கையின் வரலாற்றில் ஒரு ஜனாதிபதி மக்கள் கிளர்ச்சியால் அகற்றப்பட்டமையும் தென்னிலங்கையின் அரசியல் கட்சிகளை பெரியளவில் சிதறடித்திருந்தது. மீண்டும் அவைகளை ஒருங்கிணைக்கக்கூடிய ஆற்றல்வாய்ந்த ஒரு தனியாளுமை தற்போது இல்லை. யுத்த வெற்றி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவ்வாறானதொரு வாய்ப்பை வழங்கியது. ஈஸ்டர் தாக்குதல் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவ்வாறானதொரு வாய்ப்பை வழங்கியது.

ஆனால், கோட்டாபயவின் வீழ்ச்சி, சிங்கள தேசியவாத முகாம்களை பெரியளவில் பிளவுபடுத்தியிருப்பதுடன் தென்னிலங்கை அரசியலை பல முகாம்களாக கூறுபடுத்தியிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில்தான் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஒரு புதுவிதமான அரசியல் கொதிநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் சீன ஆதரவு கொள்கையால் சீனா அதிகளவில் இலங்கைக்குள் ஊடுருவிவிட்டது. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் சீனாவின் விஸ்தரிப்புவாத அணுகுமுறைக்கு கடிவாளமிடலாம் என்னும் கணிப்பு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவே அம் பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கினார். இது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கியது. சீனாவின் முக்கிய மூலோபாய திட்டங்களின் களமாக இலங்கை மாறிவிட்டது. இந்த நிலையில் அண்மைக்காலமாக வடக்கு, கிழக்குக்குள்ளும் சீனா அதன் ஆட்டத்தை மெதுவாக ஆரம்பிக்க முயற்சிக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் இனிவரப் போகும் தேர்தல்களின்போது சீனா அமைதியாக இருக்க வாய்ப் பில்லை. அநுரகுமாரவின் கருத்தை இவ்வாறான பின்புலத்தில்தான் நோக்க வேண்டும்.

பலம்பொருந்திய சக்திகளின் தலையீடுகள் தவிர்க்க முடியாதவை. அவற்றை நம்மால் மாற்றியமைக்க முடியாது. ஆனால், அவற்றை புரிந்து கொண்டு - அதற்கேற்ப, தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு தேர்தல் வியூகங்களை வகுக்க வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு உண்டு.

# சிங்களவர் - தமிழர் மத்தியில் பரஸ்பரம் புரிந்துணர்வில்லை!

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 04

நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வின்மை தொடர்ந்தும் நீடித்து வருவதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

குறுகிய நோக்கங்களைக் கொண்ட தரப்பினர் இரண்டு இன சமூகங்களிலும் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இந்த குறுகிய எண்ணம் கொண்டவர்களினால் தடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த தரப்பினர் நாட்டுக்கு எதிரான கொள்கைகளை கொண்டிருந்த போதிலும் தற்பொழுது நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர்களது நிலைப்பாட்டை முற்று முழுதாக நிராகரிக்காது அவர்களது கருத்துக்களுக்கு செவி மடுக்க வேண்டுமென கரு ஜயசூரிய கூறினார். (அ)

# வட்டுக்கோட்டை இளைஞர் மரணம் சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 04

வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்ததாக கூறப்படும் இளைஞரின் மரணத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரின் விளக்க மறியலில் எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு ஏற்பட்ட காயங்களினால் குறித்த இளைஞன் உயிரிழந்ததாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ள நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

மேலும் உயிரிழந்த குறித்த இளைஞனை சித்திரவதைக்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஐந்து பொலிஸார் மற்றும் மேலதிக சந்தேக நபர்களையும் விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கு விசாரணைப் பொறுப்பதிகாரிக்கு நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த சம்பவத்தில் பொலிஸார் தொடர்புபட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறும் மன்று கட்டளையிட்டது.

இந்த நிலையில் குறித்த வழக்கின் குற்றப் பத்திரத்தினை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தியதுடன் மூல வழக்கை சட்டமா அதிபருக்கு சமர்பிக்குமாறும் மன்றின் பதிவாளருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற 26 வயதுடைய இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த நவம்பர் 18 ஆம் திகதி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை!

## மின்சக்தி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 04

பணிகள், செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது நிர்வாகத்திற்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு ஊழியரையும் பணி இடைநிறுத்தம் செய்யவும் அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் உத்தேச சீர்திருத்தங்கள் ஒப்புதலுக்காக திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு மின்சாரக் கட்டணக் குறைப்பு முன்மொழிவை இலங்கை மின்சார சபை அடுத்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**இடபம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள்.

**மிதுனம்**

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும் வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கடகம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**

கடந்த 2 நாட்களாக இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**துலாம்**

எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

**விருட்சிகம்**

ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**

உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தலைமை நம்பிக்கை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த மோதல்கள் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மன இறுக்கம் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். நேர்மறை எண்ணம்.

**மீனம்**

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பழைய கடன்களை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# 504 தமிழக மீனவர்கள் கைது; கடந்த 2 ஆண்டுகளில் மட்டும்

## இந்தியா - இலங்கை பேச்சு அவசியம்

இராமேஸ்வரம், ஜன. 04

இலங்கை கடற்படையினரால் கடந்த 2 ஆண்டுகளில் 504 தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். எனவே, இந்தியா - இலங்கை மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு காண இரு நாட்டு மீனவர்களிடையே பேச்சு நடத்தி சுமுக முடிவை எட்ட வேண்டும் என மீனவர் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

கொரோனா பரவல் காரணமாக 2020, 2021ஆம் ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்வது குறைந்ததால், இலங்கை கடற்படையினரின் சிறைபிடிப்பு நடவடிக்கை குறைந்திருந்தது. ஆனால், 2022ஆம் ஆண்டில் 36 தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், 264 மீனவர்களை கைது செய்தனர். இதேபோல், 2023ஆம் ஆண்டில் 35 மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்து, 240 மீனவர்களை கைது செய்தனர்.

இலங்கை கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகள் மற்றும் படகுகள் மூலம் மீன்பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகிறது. இதுபோல், இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்கும் வெளிநாட்டு படகுகளுக்கும் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான புதிய சட்டம் இலங்கை மீன்வளத் துறையால், கடந்த 2018 ஜனவரி 24 அன்று இலங்கை நிறைவேற்றியது.

இந்த சட்டத்தின் வாயிலாக, படகின் நீளத்தை பொருத்து இலங்கை மதிப்பில் ரூ.50 லட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.17.5 கோடி வரையில் அபராதமும், கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகிறது. கடந்த 6 ஆண்டுகளாக இலங்கை கடல் எல்லைக்குள் சிறை பிடிக்கப்படும் தமிழக படகுகளுக்கு, இந்த சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அந்நாட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுகின்றன.

மேலும், இந்தச் சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தை மீனவருக்கு 14 மாதங்களும், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஒரு மீனவருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா - இலங்கை மீனவர்களிடையே பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று இந்தப் பேச்சில் எட்டப்பட்ட விடயங்களை சட்டமாக இயற்றி அவையே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் மீனவர் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

(ஐ)

# தி. மு. க.வின் செல்வம் காலமானார்!

சென்னை, ஜன. 04

சென்னை ஆயிரம் விளக்கு தொகுதி தி. மு. க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கு. க. செல்வம் உடல்நலக்குறைவால் காலமானார்.

கு.க.செல்வம் கடந்த சில நாட்களாக உடல்நலன் பாதிக்கப்பட்டு போரூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். தொடர்ச்சியாக அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் காலமானார்.

கு.க.செல்வம் ஆயிரம்விளக்கு தொகுதியில் இருந்து சட்டமன்றத்துக்கு தெரிவானவர்.



அ. தி. மு. கவில் இருந்த கு. க. செல்வம் 1997-ல் திமுகவில் இணைந்தார். தி. மு. க. தலைவர் ஸ்டாலின் உட்பட கட்சியின் மூத்த நிர்வாகிகளிடம் நெருங்கி பழகியவர். ஸ்டாலினுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அவர், தி. மு. க. தலைமை நிலைய செயலாளராக நியமிக்கப்பட்டார். கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ப.வளர்மதியை தோற்கடித்தார்.

அண்மையில், தி. மு. கவில் அவர் ஓரங்கட்டப்பட்டபோது பா. ஜ. க. தலைவர்களை சந்தித்திருந்தார். இது தி. மு. கவுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது. பா. ஜ. க.வில் சிலகாலம் இணைந்தவர். 2022ஆம் ஆண்டு மீண்டும் தி. மு. கவில் இணைந்தார்.

மீண்டும் திமுக தலைமை நிலைய அலுவலக செயலாளராக நியமிக்கபட்ட நிலையில் உடல்நல குறைவால் மறைந்தார்.

(ஐ)

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாவிடின் போராட்டம்

## பா. ம. கவின் தலைவர் அறிவிப்பு

கடலூர், ஜன. 04

தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாவிடில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும். இது எங்களது உரிமை போராட்டம் என்று சிதம்பரத்தில் நடந்த பா. ம. க. கருத்தரங்கில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

“நல்ல நிர்வாகம் செய்பவர்கள் மக்கள் பிரச்னை என்னவென்று கண்டறிந்து தீர்வு கொண்டு வர வேண்டும். தமிழகத்தில் ஏழே முக்கால் கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் என்ன நிலையில் உள்ளார்கள் என்ற கண்டறிவதற்காகதான் நாங்கள் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்துமாறு கூறுகிறோம்.




2 ஆயிரம் ஆண்டுகளாக சாதியை வைத்துதான் பாகுபாடு, அடக்குமுறைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது எந்தெந்த சமுதாயம் எந்த நிலையில் உள்ளார்கள் என்று கண்டறிய வேண்டும். இந்தியாவிலேயே கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு நமக்கு சாதி அடிப் படையில் தான் கிடைக்கிறது. மதம், இனம் அல்ல மொழி அடிப் படையிலோ இல்லை.

தமிழகத்தில் 436 சாதிகள் உள்ளன. அந்த சாதிகள் எந்த நிலையில் உள்ளன.? அவர்களுக்கு என்ன இடஒதுக்கீடு வழங்குகிறீர்கள்? சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல் எந்த அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குகிறீர்கள்? நாங்கள் சாதிவாரியாக கணக்கெடுப்பு கோரினால், சாதி அரசியல் செய்வதாக கூறுகிறார்கள். சாதி அரசியல் செய்ய வேண்டும் என்ற அவசியம் பா. ம. கவுக்கு கிடையாது. எங்களது அரசியல் சமூகநீதி -என்றார்.

(ஐ)

# ஜனவரி 20 உதயமாகும் எதிரணியின் கூட்டணி!

## மனோ, திகா, ஹக்கீம் களத்தில்

**கொழும்பு, ஜன. 04**

**ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள புதிய அரசியல் கூட்டணி 2024 ஜனவரி 20 ஆம் திகதி வெளியிடப்படும் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.**

இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும், புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிப்புகூட இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

கூட்டணியில் அங்கம் வகிக்க வேண்டிய தரப்புகளை தீர்மானிக்கும் அதிகாரத்தை கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி வழங்கியுள்ளது.

அதேவேளை இனவாதிகளையும், கடும்போக்குவாதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டாம் என சஜித் தரப்பில் இணைந்துள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான தற்போதைய கூட்டணியில் தமிழ் முற்போக்கு கூட்டணி அங்கம் வகிக்கின்றது. புதிய கூட்டணியிலும் அது தொடரும் என கூறப்பட்டது.

(அ)

# கட்சி தாவல்களினால் விசனத்தில் மைத்திரி!



கொழும்பு, ஜன. 04

“கட்சி தாவும் அரசியல்வாதிகளுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. அடுத்த தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்.” - என்று சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசியலில் அங்கும், இங்கும் கட்சி தாவும் சம்பவங்கள் தொடர்கின்றன. ஆனால் தேர்தலொன்றுக்கு சென்ற பிறகு இவ்வாறு கட்சி தாவும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள்.

கட்சி தாவும் நபர்களுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது. தாவியவர்களுக்கு கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது தெரியும். யார் வந்தாலும், போனாலும் தெளிவான தொரு கொள்கை இருந்தால் போதும் நாட்டை மீட்க.-என்றார்.

(அ)



# வரித் திணைக்களத்துக்கு முன் துக்க சோறு சமைத்து எதிர்ப்பு

## காகமும் வரவழைப்பு

கொழும்பு, ஜன. 04

ரணில் - ராஜபக்ச அரசின் இறுதி பயணம் ஆரம்பித்துவிட்டது என சுட்டிக்காட்டி, உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு முன்பாக துக்க சோறு சமைத்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற் வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தே சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் இணைந்து, இவ்வாறு துக்க சோறு சமைத்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு துக்க சோறு சமைத்து , 'காகங்களுக்கும்' வைக்கப்பட்டன. 'கா, கா, என காகங்களை அழைத்ததுடன், காகம் அமெரிக்கா சென்றுவிட்டது என பஸில் ராஜபக்சவையும் மறைமுகமாக சாடினர்.

நாட்டு மக்களுக்கு உண்பதற்கு வழியில்லை. அதனை வெளிப்படுத்தும் விதமாகவும், வரிகளை குறைக்குமாறு வலியுறுத்தியுமே இவ்வாறு செயற்பட்டோம் என சிவில் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வரி திணைக்கள அதிகாரிகள் முறையாக செயற்பட்டால், முறையாக வரிகளை வசூலித்தால் அரச வருமானம் அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டனர்.

(அ)

# மனநலம் பாதிக்கப்பட்ட மகளால் தாக்கப்பட்டு தந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 04

காலி - வதுரம்ப பிரதேசத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட மகளால் தாக்கப்பட்டு தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காலி - வதுரம்ப பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடையவராவார்.

மனநலம் பாதிக்கப்பட்ட 22 வயதுடைய தனது மகளுக்கு மருந்துகளை உணவில் கலந்து கொடுக்கும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர் இதய நோயினால் பாதிக்கப்பட்டவர். குறித்த தாக்குதலில் காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தின்போது வீட்டில் இருந்த தாயும் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# வரி அதிகரிப்பை வர்த்தகர்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது

## திறைசேரியின் செயலாளர் வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 04

இவ்வாண்டு முதல் அமுலுக்கு வந்திருக்கும் பெறுமதிசேர் வரி (வற்வரி) அறவீடானது வருமானத்தை அதிகரிப்பதையும், வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. சில வர்த்தகர்கள் பெறுமதிசேர் வரி விதிக்கப்படாத பொருட்களின் விலைகளையும் அதிகரித்து இச்சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவ்வாறு செயற்படவேண்டாம் என்று வர்த்தகர்களிடம் கேட்டுக் கொள்வதாக நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2022 ஆம் ஆண்டு நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்ததுடன், அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை செலுத்துவதில்கூட நாம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டோம்.

குறிப்பாக வருமானத்தை அதிகரிப்பது எப்படி? செலவுகளைக் குறைப்பது எப்படி? வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவது எப்படி? என்ற கேள்விகளே மிகமுக்கிய சவாலாக இருந்தது. அதனையடுத்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வரி அறவீடுகளில் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டோம்.

அதேபோன்று அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி சகல அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பினோம். நாட்டில் வரிவருமானத்தை சேகரிக்கும் பிரதான கட்டமைப்புக்களான வருமானவரித்திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன வரி அறவீடுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் பாராளுமன்ற மேற்பார்வைக்குழுக்களும் குறிப்பிடத்தக்களவிலான பங்களிப்பினை வழங்கின.

நாட்டின் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கு நாம் இன்னும் நீண்டதூரம் பயணிக்கவேண்டியுள்ளது. ஆனால் அதனை முன்னிறுத்தி நாம் மிகவும் வலுவான அடித்தளத்தை இட்டிருப்பதாகக் கருதுகின்றோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் சமுர்த்தி கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டதைப் போன்ற 3 மடங்கு நிதி 2024 இல் அஸ்வெசும கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம். எனவேதான் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருப்பினும், இவ்வாறான சமூகப்பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2022 இலிருந்து 2023 இற்கு நகர்ந்ததை விட, 2023 இல் இலிருந்து 2024 இற்கு ஓரளவு சிறந்த நிலையிலேயே நகர்கின்றோம்.

இப்பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு நாம் காரணமாக இல்லாத நிலையில், எதற்காக வரி செலுத்தவேண்டும் என எனது மகன் உள்ளிட்ட பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

இருப்பினும் தற்போது நாடு நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இதிலிருந்து நாட்டை மீட்பதற்கு நாமனைவரும் பங்களிப்புச் செய்யவேண்டியது அவசியமாகும்.



அது மிகக்கடினமானதாக இருந்தாலும், அதனைச் செய்தேயாகவேண்டும். அதேபோன்று தாம் செலுத்தும் வரிப் பணம் உரியவாறு செலவிடப்படுகின்றதா எனப் பொதுமக்கள் கேட்பதிலும் நியாயம் இருக்கின்றது. அந்நிதி முறையான விதத்தில் செலவிடப்படுவதை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

இவ்வாண்டு முதல் அமுலுக்கு வந்திருக்கும் பெறுமதிசேர் வரி (வற்வரி) அறவீடானது வருமானத்தை அதிகரிப்பதையும், வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

முன்னர் பெறுமதிசேர் வரிக்குள் உள்வாங்கப்பட்டிருக்காத பொருட்கள் இம்முறை அதில் உள்வாங்கப்பட்டிருப்பினும், இதுபற்றி நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்.

அதேவேளை சில வர்த்தகர்கள் பெறுமதிசேர் வரி விதிக்கப்படாத பொருட்களின் விலைகளையும் அதிகரித்து இச்சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவ்வாறு செயற்படவேண்டாம் என்று வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

(அ)

# வரி அறவீடு உள்ளிட்ட மறுசீரமைப்புகள் இன்றேல் லெபனான், ஆர்ஜென்ரீனா நிலையை அடைவோம்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 04**

**நாட்டு மக்கள் தற்போது மிகக்கடினமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருப்பதனால், வரி அறவீடுகள் உள்ளிட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பில் யாராலும் விமர்சனங்களை முன் வைக்கமுடியும். ஆனால் இம்மறுசீரமைப்புக்களை மேற்கொண்டிருக்காவிடின், நாம் எந்த நிலையில் இருப்போம் என்பது பற்றி எவரும் சிந்திப்பதில்லை. பொருளாதார நெருக்கடியை அடுத்து உடனடி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தியிருக்காவிடின் நாம் லெபனான், ஆர்ஜென்ரீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலையைத்தான் அடைந்திருப்போம். ஆனால் இவ்வாறான மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக்குறுகிய காலத்தில் அதிலிருந்து விரைவாக மீண்ட ஒரேயொரு நாடு இலங்கை மாத்திரமே என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாடு கடந்த 2022 ஆம் ஆண்டு முன்னொருபோதுமில்லாத வகையிலான மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக பொருளாதாரம் 8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது டன் பணவீக்கம் சடுதியாக பெருமளவால் அதிகரித்தது. வெளிநாட்டுக்கையிருப்பின் அளவு வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்விளைவாக பணவீக்கம் குறைக்கப்பட்டமை, வெளிநாட்டுக்கையிருப்பு மட்டம் உயர்வடைந்தமை உள்ளிட்ட பிரதிபலன்களை அடைந்து கொள்ள முடிந்ததுடன் பொருளாதாரம் மீண்டும் சரியான பாதையில் பயணிக்க ஆரம்பித்தது. பொருளாதார மீட்சியை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் மிகக் கடினமானவையாக இருப்பினும், அவற்றைத் தொடர்ந்து சீராக முன்னெடுத்துச்செல்வதன் மூலம் இவ்வாண்டில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துகொள்ளமுடியும். குறிப்பாக 2024 இல் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும், பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்தில் பேணுவதற்கும்,



ஏற்றுமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் வர்த்தக செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை மிகவும் கடினமானதாக இருப்பதனால், அதுகுறித்து யாராலும் பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கமுடியும். ஆனால் நாம் முன்னெடுத்திருக்கும் மறுசீரமைப்புக்களையும், கடினமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்காவிடின், நாம் எந்த நிலையில் இருப்போம் என்பது பற்றி பொதுமக்கள் சிந்திப்பதில்லை. உண்மையில் நாம் உடனடி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தியிருக்காவிடின் லெபனான், ஆர்ஜென்ரீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலையைத்தான் அடைந்திருப்போம். இவ்வாறான மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக்குறுகிய காலத்தில் அதிலிருந்து விரைவாக மீண்ட ஒரேயொரு நாடு இலங்கை தான்.

அடுத்ததாக நாம் 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் உத்தியோக பூர்வ கடன்வழங்குனர்களுக்கான கடன்மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்தினோமே தவிர, நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அறிவிக்கவில்லை. வங்குரோத்துநிலை என்பது கடன்களை மீண்டும் எப்போதும் செலுத்தப்போவதில்லை எனும் நிலையாகும். அவ்வாறான சூழ்நிலையில் யாரும் எமக்கு கடன்வழங்க முன்வரமாட்டார்கள். ஆனால் நாம் கடன்மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்திய தன் மூலம் கடன்மறுசீரமைப்பின் ஊடாக கடன்களை மீளச் செலுத்துவதற்குரிய காலப்பகுதியை நீடிக்குமாறு கோரினோம். அதுமாத்திரமன்றி அவ்வேளையில் (2022 ஏப்ரலில்) எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம். 2022 ஏப்ரல் - ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் காணப்பட்டதை ஒத்த நிலை தொடர்ந்திருந்தால், நாட்டின் பொருளாதாரம் முற்றாக சீர்குலைந்திருக்கும். ஆனால் நாம் ஒப்பீட்டளவில் விரைவாக மீட்சியடைந்து சரியான திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது முன்னெடுக்கப்படும் சகல மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் அனைவருக்கும் இடையே சமனாகப் பகிர்ந்துகொள்வதன் மூலமே இந்த நெருக்கடியிலிருந்து முழுமையாக மீளமுடியும்-என்றார். (அ)

# காஸாவில் இருந்து புலம்பெயர்ந்த குடும்பங்கள் இலங்கைக்கு நன்றி தெரிவித்த பலஸ்தீன தூதுவர்




கொழும்பு, ஜன. 04

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் காரணமாக நிர்கதிக்குள்ளான இரண்டு குடும்பங்கள் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளன.

குறித்த இரண்டு குடும்பங்களும் இலங்கை மற்றும் பலஸ்தீனத்தை பூர்வீகமாகக் கொண்டவை என இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் தர் ஜைட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரண்டு குடும்பங்களின் தாய்மார்களும் இலங்கை முஸ்லிம்கள் என தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் பெருமளவான மக்களைக் கொன்று குவித்த மோதலின் விளைவாக காஸாவில் தங்களுக்குச் சொந்தமான அனைத்தையும் இழந்து ஆதரவற்றவர்களாக மாறியுள்ளதாக இலங்கையை வந்தடைந்துள்ள பலஸ்தீனக் குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தமக்கு கடவுச்சீட்டு இல்லை எனவும், கடவுச்சீட்டை பெறுவதற்கு இலங்கைத் தூதரகம் உதவியதாகவும் 16 வயதுடைய பலஸ்தீன சிறுவன் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, குறித்த இரண்டு குடும்பங்களும் காஸாவில் இருந்து வெளியேறுவதற்கு உதவிபுரிந்த இலங்கை அரசாங்கத்திற்கு பலஸ்தீன தூதுவர் நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# நடைபெறவுள்ள தேர்தல்கள் உக்கிர போரை உருவாக்கும்

## கூறுகிறார் அனுரகுமார

கொழும்பு, ஜன. 04

நாட்டில் நடைபெறவுள்ள தேர்தல்கள் இலங்கை அரசியல் அரங்கில் இதுவரை இல்லாத அளவுக்கு உக்கிரமான போரை உருவாக்கும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர்,

தற்போது உருவாகியுள்ள அரசியல் முகாம்களும், அரசியல் பிளவுகளும் சாதாரணமானவை அல்ல. இம்முறை அரசியல் போரில் மக்கள் விடுதலை முன்னணி தோல்வியுற்றால், அது நாட்டையும் மக்களையும் மேலும் துயரத்திற்கு இட்டுச் செல்லும் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வெற்றி நாட்டை புதிய அபிலாஷைகளுடன் ஒரு பாதையில் வழிநடத்தும்.

நீண்டகாலமாக அரசாங்கங்கள் கடைப்பிடித்து வரும் தோல்வியடைந்த பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளுக்கு எதிராக புதிய பொருளாதாரப் பயணத்தை உருவாக்கும் சித்தாந்தத்தை மக்கள் விடுதலை முன்னணி விவாதிக்கும் அதே வேளையில் அரச சொத்துக்களை விற்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த அரசாங்கம் திட்டங்களை வகுத்து வருகிறது.

சமூகக் குற்றங்களை எதிர்த்துப் போராடவும், ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்தை மாற்றவும், அதன் மூலம் நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கவும் திட்டங்களை வகுப்பது குறித்தும் மக்கள் விடுதலை முன்னணி ஆலோசித்து வருகிறது-என்றார். (அ)

# பதவி ஏற்றதும் வாக்குறுதிகளை மறந்து நடக்கும் ஜனாதிபதிகள்!

## மல்வத்து பீடாதிபதி பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 04

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக வாக்குறுதி அளிக்கும் ஜனாதிபதிகள் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் அதனை மறந்து விடுவதாக மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மல்வத்து பீடாதிபதியை சந்தித்த போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தான் மாநாயக்க தேரராக பதவி ஏற்றுக்கொண்ட கடந்த இருபது ஆண்டுகளாகவே இந்த நிலைமை நீடிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வதாக தம்மிடம் வாக்குறுதி அளித்த ஜனாதிபதிகள் எவரும் பதவி ஏற்றதன் பின்னர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் இந்த விடயம் பற்றி பேசப்பட்டு தேர்தலின் பின்னர் வழமை போன்று அந்த விடயம் இருட்டடிப்புச் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தரப் பரிசோதனையின்போது அதிகளவு மருந்துகள் தோல்வி!

கொழும்பு, ஜன. 04

அதிக எண்ணிக்கையான மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடைந்த ஆண்டாக 2023 பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த ஆண்டு மொத்தமாக சுமார் 124 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு தெரிவிக்கையில்-

"தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில், 55 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை, 40 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன, மற்றவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து வந்துள்ளன.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டுள்ளதுடன் கொள்வனவு செய்யப்படுவதும் நிறுத்தப்பட்டுள்ளது.

தவிரவும், மொத்தம் 35 புளூகுளொக்சசிலின் மருந்துகள் திரும்பப் பெறப்பட்டுள்ளது, இந்த மருந்து இரத்மலானையில் உள்ள அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, அதுமாத்திரமன்றி இது 2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் அதிகபட்ச எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது.

மேலும், சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, 2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தம் 600 மருந்துகள் தரக் குறைவான மருந்துகளாக கண்டறியப்பட்டுள்ளன.

அதில் 2019 ஆம் ஆண்டில் 96 மருந்துகளும், 2022 ஆம் ஆண்டில் 86 மருந்துகளும் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன-என தெரிவிக்கப்பட்டது. (அ)

# முக்கிய அதிகாரிகளின் ஓய்வினால் திண்டாடும் மதுவரித்திணைக்களம்

## திட்ட இலக்கில் வீழ்ச்சி ஏற்படலாம்

கொழும்பு, ஜன. 04

**புதிய வற் வரி திருத்தங்கள் காரணமாக, ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து நாளொன்றுக்கு 160 மில்லியன் ரூபாய் கூடுதல் வரி வருவாயை இலங்கை மதுவரித்திணைக்களம் வசூலிக்க வேண்டியுள்ளது.**

எனினும் பல உயர்மட்ட பணியாளர்கள் உள்ளிட்டோர் விரைவில் ஓய்வு பெறவுள்ளமையால் இந்த திட்ட இலக்கில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்த மூன்று மாதங்களில் திணைக்களத்தின் பெருமளவான பணியாளர்கள் வயது வரம்பின் அடிப்படையில் ஓய்வு பெறப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மூன்று முக்கிய வருவாய் ஈட்டும் நிறுவனங்களில் ஒன்றாக இருக்கும் மதுவரித்திணைக்களம் ஏற்கனவே உயர்மட்ட அதிகாரிகளுக்கான கடுமையான பணியாளர் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.

இந்தநிலையில் அதன் தலைவர் மற்றும் மதுவரித்திணைக்கள ஆணையாளர் உட்பட பலர் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் 60 வயது நிறைவடைந்தவுடன் பணிகளில் இருந்து ஓய்வுப் பெறவுள்ளனர்.

ஓய்வுப்பெறப்போகும் இந்த உயர்மட்ட பணியாளர்கள் அனைவரும் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர்கள்.

அவர்கள் அனைவரும் அடுத்த மூன்று மாதங்களில் ஓய்வு பெறும்போது, சமீப காலத்தில் தரவரிசையில் இருந்து பதவி உயர்வு பெற்ற எஞ்சிய புதிய உதவி ஆணையர்களால் செயற்பாடுகள் முன்கொண்டு செல்லப்பட வேண்டும்.

இது திணைக்களத்தின் கட்டமைப்புக்கு பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என திணைக்கள தரப்புக்கள் குறிப்பிட்டுள்ளன. (அ)



கிளிநொச்சி பொது வைத்தியசாலையில்

# கண் சத்திர சிகிச்சையில் பங்காற்றிய வைத்தியர்கள், தாதியர் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன. 04

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சையில் பங்காற்றிய வைத்தியர்கள், தாதியர்கள்,ஊழியர்கள் ஆகியோர்களை சேவை நலன் பாராட்டு விழாவை கிளிநொச்சி வைத்தியசாலையின் நோயாளிகள் நலச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இவ் பாராட்டு நிகழ்வின் போது வைத்தியசாலைக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான மாத்திரைகள் பொதி செய்யும் இயந்திரம் மற்றும் ஆறு சக்கர நாற்காலிகள் என நன்கொடை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர், மாகாண விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர், முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளர், வைத்தியர்கள், பாடசாலை முதல்வர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கைப் பிரஜைகள் இரணைதீவு செல்ல அனுமதி வழங்கப்படவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 04

இலங்கைப் பிரஜைகள் இரணைத்தீவிற்குச் செல்வதற்கு கடற்படையினர் தடை விதிக்கக் கூடாது என நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான ருக்கி பெர்ணாண்டோ முன்வைத்த அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த விசாரணையின்போது ஆணைக்குழு அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

“கிளிநொச்சி மாவட்டத்தின், இரணைத்தீவுக்கு கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி செல்ல முயன்றபோது என்னை கடற்படையினர் தடுத்தன் மூலம் எனது அடிப்படை உரிமை மீறப்பட்டது” என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டரீதியாக தடைகள் இருந்தால் மாத்திரமே முன்னனுமதியைப் பெறுவதற்கு கோரிக்கை வைக்க வேண்டும் அல்லது அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நடமாடும் சுதந்திரம் இலங்கை அரசியல் யாப்பு பிரிவு 14 (1) (எச்) மற்றும் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ள சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தீர்மானம் 12 கீழ் அளிக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்திய அந்த ஆணைக்குழு, “எதிர்காலத்தில் இரணைத்தீவிற்கு குடிமக்கள் செல்லும் போதும் அவர்களின் நடமாடும் சுதந்திரத்தில் குறுக்கீடுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதால், இதில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்துவதோ அல்லது இந்த விடயத்தை இணக்கப்பாடு காணும் வழிமுறைகளுக்கு எடுத்துச் செல்வதோ முறையானதாக இருக்காது” என தனது அறிவிப்பில் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி காலை ருக்கி பெர்னாண்டோவும் வேறு இரு ஊடகவியலாளர்களும் இரணைத்தீவிற்குச் செல்லும் நோக்கில் முழங்காவிலிலுள்ள இரணைமாதா நகரைச் சென்றடைந்தனர். ஆனால், அங்குள்ள சோதனைச்சாவடியில் அவர்கள் மூவரும் படகில் ஏறிச் செல்வதை தடுத்தனர். இதன் மூலம் இரணைத்தீவிற்கு செல்லும் தனது நடமாடும் சுதந்திரம் தடுக்கப்பட்டது என்று அவர் முறையிட்டார்.

இதையடுத்து, அந்த ஆணைக்குழு இலங்கை கடற்படையிடமிருந்து அறிக்கை ஒன்றை கோரியது. இதற்கு பதிலளித்த கடற்படைத் தளபதி, கடற்படை தலைமையகத்திற்கும் வடக்கு மத்திய கடற்படை கட்டளைப்பிரிவுக்கும் இடையே “தொடர்பாடல் இடைவெளி” இருந்தமையே காரணம், எந்த ஊடகவியலாளரும் அங்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்படவில்லை என்று கூறியிருந்தார்.

அதையே ஒரு முரண்பாடாகக் கருத முடியும். ஏனென்றால், “ஏதாவது ஊடகவியலாளர் எதிர்காலத்தில் அந்த தீவிற்குச் செல்ல வேண்டுமென்றால் அவர்கள் முதலில் கடற்படையினருக்கு தெரிவிக்க வேண்டும், அதையடுத்து அவர்கள் அத்தீவிற்குச் செல்வதற்கான பயண ஒழுங்கு தொடர்பில் கடற்படை உதவ முடியும்” என கடற்படை தலைமையகம் தனது பதிலில் தெரிவித்துள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அறிக்கையில் மேற்கோள் காட்டியுள்ளது.

தமது விசாரணையில் ஒரு பகுதியாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலிருந்தும் ஒரு அறிக்கையை கோரியிருந்தது. அதில் அவர்கள் “இரணைத்தீவில் பொலிஸ் மையம் ஒன்று இல்லாததால், பொதுவாக அப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை கடற்படை விழிப்பாக உள்ளது, அதனால், இரணைத்தீவில் வசிக்காதவர்கள் யாரும் அங்கு செல்ல முயன்றால், அவர்களது அடையாளத்தை கடற்படையினர் சோதனை செய்கின்றனர்” என பதிலளித்திருந்தனர்.

ருக்கியும் அவரது குழுவினரும் இரணைத்தீவிற்குச் செல்வதற்காக ஓர் வாகனத்தை வாடகைக்கு எடுத்திருந்தனர்.

“கொழும்பிலிருந்து ஒரு வாகனத்தில் நாங்கள் இரவு முழங்காவில் சென்றோம். அங்கிருந்து இரணைத்தீவிற்குச் செல்வதற்காக உள்ளூர் மீனவர்களிடமிருந்து ஒரு படகையும் ஏற்பாடு செய்திருந்தோம். அங்கு உள்ளூர் பங்குத்தந்தை உட்பட பலர் அங்கு எமக்காக காத்திருந்தனர். அங்கு உள்ளூர் மக்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு போராட்டம் மற்றும் கூட்டத்தில் நானும் பங்குபற்ற எண்ணியிருந்தேன். அங்குள்ள பழமையான கத்தோலிக்க தேவாலயத்திற்கு விஜயம் செய்யவும், அந்த தீவில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் குறித்து ஒரு கட்டுரை எழுதவும் நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் கடற்படையின் தன்னிச்சையான கட்டுப்பாடுகள் காரணமாக என்னால் இதில் எதையும் செய்ய முடியவில்லை”.

சில மாதங்களுக்கு முன்னர் நெதர்லாந்து நாட்டு ஊடகம் ஒன்றிற்கு பணியாற்றும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த புகைப்படச் ஊடகவியலாளரான எல்க்ஸ்கொலியர்ஸ் இரணைத்தீவிற்குச் செல்வதிலிருந்து தடுக்கப்பட்டார். புதுடில்லியைத் தளமாகக் கொண்டு பல ஊடகங்களுக்குச் செயற்படும் அவர் செய்தி சேகரிப்பிற்காக முன் அனுமதியும், ஊடக அமைச்சிலிருந்து அதற்கான அங்கீகார அட்டையையும் பெற்றிருந்தார்.

“இலங்கைகு பணி நிமித்தமாகச் சென்றுள்ளேன். முழங்காவிலுள்ள கடற்படை மற்றும் பதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஒரு புகைப்பட ஊடகவியலாளர் என்ற வகையில் என்னை இரணைத்தீவிற்குச் செல்லவிடாமல் தடுத்துள்ளனர். இலங்கையில் சட்டபூர்வமாகப் பணியாற்ற அனுமதியும் பெறிருந்தேன். கடற்படை என்னை எதையும் எக்ஸ் தளத்தில் பதிவிடக்கூடாது என்று அறிவுறுத்தினர்” என அவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பதிவிட்டிருந்தார்.

எனினும், சில மணி நேரங்கள் மற்றும் ஏராளமான தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றை அடுத்து இறுதியாக அவரால் அந்த தீவிற்குச் செல்ல முடிந்தது. அதை அவர் பின்னர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

“6 மணி நேரமாக நான் பல கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தும், உள்விவகார அமைச்சு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியுடனும், என்னால் இரணைத்தீவைச் சென்றடைய முடிந்தது. இந்த ஆறு மணி நேரத்தில் சுமார் 50 தொலைபேசி அழைப்புகளும், சுமார் 15 மின்னஞ்சல்களும் அனுப்ப வேண்டியிருந்தது” என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பின்னர் கூறியிருந்தார்.

இலங்கை கடற்படையின் நடவடிக்கை சட்ட ரீதியாக இல்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்தாலும், தமது உரிமை மீறல்களை அங்கீகரித்து அதற்கு தனக்கு எழுத்து மூலமான மன்னிப்பையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்த ஆணைக்குழு மறுத்துவிட்டது என, ருக்கி பெர்னாண்டோ கூறுகிறார்.

இதில் தான் இரணைத்தீவிற்குச் சென்றுவந்த செலவீனங்கள் மற்றும் தனது உரிமைகள் மீறப்பட்டதற்கான இழப்பீட்டுத் தொகையும் அடங்கும் என்கிறார் அவர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இப்போது “இலங்கை கடற்படை வடக்கு மத்திய கட்டளைப் பிரிவிலுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதில் எவ்விதத் தடையுமின்றி, முன் அனுமதி அல்லது அறிவிப்புச் செய்யாமல் இலங்கையின் அனைத்து குடிமக்களும் இரணைத்தீவிற்குள் நுழைய முடியும் என தெரிவிக்க வேண்டும்” என வலியுறுத்தியுள்ளது. (அ)

# இறக்காமம், வரிப்பத்தாஞ்சேனை பகுதியில் 850 ஏக்கர் நெல்வயல்கள் நீரில் மூழ்கி நாசம்!

## நீர்ப்பாசன திணைக்களத்தின் உதவியை நாடும் விவசாயிகள்

அம்பாறை, ஜன. 04

**இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறந்த நிலையில் அங்கிருந்து பெருக்கெடுத்து வரும் நீர் வரிப்பத்தஞ்சேனை முதலியார் விவசாய அமைபின் கீழுள்ள இலுக்கு வட்டை, கத்தம் ஓதினார் வட்டை, மலையடி ஆகிய கண் டங்களைச் சேர்ந்த சுமார் 850 ஏக்கர் நெல் வயல்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளதாக முதலியார் வட்டை விவசாய அமைப்பின் பொருளாளர் முஹம்மட் நிஹால் தெரிவித்தார்.**

மலையடி வலது கரை நீர்த் தேக்கத்தின் வான் கதவுகள் மூடப்பட்டுள்ளதனாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளமை யால் அம்பாறை மற்றும் நீர்ப் பாசன திணைக்கள பொறியலா ளர் அலுவலக அதிகாரிகள் இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு விவசாய அமைப் புகள் கேட்டுள்ளனர்.

உள்நாட்டு தேசிய நெல் உற்பத்தியில் பாரிய பங்களிப்பு செய்யும் அம்பாறை மாவட்டத் திலுள்ள இப் பிரதேச விவசாயி கள் பிரதானமான வாழ்வாதரம் விவசாயம் மட்டுமே.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மலையடி வலது கரை நீர்த்தேக்க வான் கதவுகளை திறக்க உதவுமாறு விவசாய அமைப்புகள் கேட்டுள் ளன.

(அ)



## அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக டீ.எஸ்.சேனநாயக சமுத்திர பகுதிக்கு விஜயம்

அம்பாறை, ஜன. 04

வான் கதவுகள் திறக்கப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களுள் ஒன்றான இங்கினியாகல டீ.எஸ். சேனநாயக சமுத்திரத்தின் நிலைப்பாட்டை ஆராய்வதற் காக அம்பாறை மாவட்ட அர சாங்க அதிபர் சிந்தக அபேவிக் ரம, அம்பாறை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் வீரசிங்க மற்றும் நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது சமுத்திரத்தின் சுற்றயல் பிரதேசங்களில் வாழ் கின்ற மக்களின் அன்றாட செயற் பாடுகள் பற்றியும் ஆராய்ந்தனர்.

(அ)

# காரைதீவு- மாவடிப்பள்ளி வீதியும் பெருவெள்ளத்தில்

காரைதீவு, ஜன. 04



காரைதீவு மாவடிப்பள்ளி வழியாக அம்பாறை செல்லும் பாதை வெள்ளத்தினால் மூழ்கி போக்குவரத்து ஸ்தம்பிதமாகி யுள்ளது. அம்பாறை மாவட் டத்தில் தொடர்ச்சியாக பெய் துவரும் மழைகாரணமாக பெரிய பாலத்திற்கும் சின்ன பாலத்திற்கும் இடையில் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இன்னும் மழைபெய்தால் முற் றாக போக்குவரத்து தடைப்ப டும் அபாயம் உள்ளது.

மட்டுமின்றி தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி நீர் நிலைபோன்று காட்சியளிப்பதுடன் வீதி ஓரங்களில் மீன்பிடி நடவடிக்கையில் பொதுமக்கள் ஈடுபட்டுவருவதையும் காணக்கூடியதாக உள்ளதுடன் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தின் வீடுகள் பலதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் கிராம மக்களில் சிலரும் தமது விடுகளிலிருந்து வெளியாகி பாதுகாப்பான இடங்களை நோக்கியும், உறவினர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளனர்.

வெள்ளநீர் தேங்கியமையால் கல்முனை - அக்கரைப்பற்று காப் பெட் வீதிகள் குண்டும் குழியுமாக மாறியுள்ளதுடன் வாகன போக்கு வரத்திற்கும் இடைஞ்சலாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

# வெள்ளத்தில் திராய்க்கேணி கிராமம்!

காரைதீவு, ஜன. 04

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள திராய்க் கேணி தமிழ் கிராமம் வெள்ளத் தில் மூழ்கியுள்ளது.

அங்குள்ள பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தால் சூழ்ந் துள்ளது. வீதிகளிலும் வெள் ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

நேற்று இரவு அங்கு சென்ற காரைதீவு முன்னாள் தவிசாள ரும் பிரபல சமூக சேவையாள ருமான கி.ஜெயசிறில் அங்கி ருந்த மக்களுக்கு சமைத்த உணவை வழங்கினார்.

மக்கள் வீதிகளில் நின்று அந்த உணவை பெற்றுக் கொண் டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு கிராம சேவையாளர் வரவில்லையா என்று ஜெயசி றில் கேட்டதற்கு நான்கு நாட் கள் ஆகியும் இன்னும் வந்து பார்க்கவில்லை என்று மக்கள் வேதனையோடு கூறினார்கள்.

அங்கு ஜெயசிறில் கூறுகை யில்-



மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுடைய அவல நிலையில் பங்கு கொள் வதற்கு முன் வாருங்கள். நான் தயார். நீங்களும் தயாராகுங்கள். எந்தப் பிரதேசத்தில் சமைத்த உணவு வேண்டுமோ தொடர்பு கொள்ளுங்கள். உதவி செய்பவர் கள். சரீர உதவியாக இருந்தால் நேரடியாக பங்கு கொள்ளுங் கள். இடர் உதவி வழங்குகின்ற சமூக சேவையாளர்கள் நலம்பி ரும்பிகள் நேரடியாக உங்களு டைய உதவிகளை வழங்குவ தற்கு எங்களுடன் கை கோருங் கள் என்றும் எமது மக்களுக் காக ஆலயங்களில் அன்னதா னம் செய்வதை விட அழுதுகள் செய்வதை விட பாதிக்கப்பட்டி ருக்கின்ற மக்களுக்கு உங்களால் முடிந்த உதவியை நேரடியாக அல்லது எங்களோடு இணைந்து பணி செய்ய முன் வாருங்கள்- என்றார்.

(அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை

அம்பாறை, ஜன. 04

கிழக்கில் பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட் டுள்ள வெள்ளப்பெருக்கு மற் றும் அம்பாறை சேனநாயக்க சமுத்திர வான் கதவுகள் திறக் கப்பட்டுள்ள அறிவிப்பை தொடர்ந்து கரையோர பிரதே சங்கள் மற்றும் தாள்நில பிரதே சங்களில் வெள்ள அபாயம் ஏற் படலாம் என அனர்த்த முகா மைத்துவ நிலையம் அறிவித் துள்ளமை யாவரும் அறிந்ததே.

ஆனாலும் தென் கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளா கத்தில் இதுவரைக்கும் எந்த வெள்ள அனர்த்தமோ பாதிப்பு களோ இதுவரைக்கும் ஏற்பட வில்லை என்பதை பொது மக்க ளுக்கு அறியத்தருகிறோம் என பல்கலைக்கழக நிர்வாகம் அறி வித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த 2014 இல் ஏற்பட்ட வெள்ளபெருக்கின் புகைப்படங் களை சமூக வலைத்தளங்களி



லும் ஒரு சில ஊடகங்களும் தனிப்பட்ட நபர்களும் பொறுப் பற்ற விதத்தில் மீளவும் பதிவிட்டு தற்போது ஏற்பட்ட அனர்தமாக கண்பிப்பதை அவதானிக்க முடி கிறது.

இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றும் அத்தகைய வெள்ளப்பெருக்கின் பாதிப்பு இதுவரைக்கும் ஏற்படவில்லை யென்றும் அவ்வாறு வெள்ள அனர்த்தம் ஏற்படுமிடத்து தென் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் கள் அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தயார் நிலையில் இருப்பதனை யும் உறுதி செய்வதாக பல்கலை கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் ஊட கங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒலுவில் வளாகத் தின் தாழ்நிலங்களில் அமைந் துள்ள கட்டடங்களில் உள்ள அசையும் சொத்துகள் அனைத் தும் பாதுகாப்பான இடங்க ளுக்கு நகர்த்தப்பட்டு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மல்ஹருஸ் ஸம்ஸ் ம.வியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கல்முனை, ஜன. 04



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாவதையிட்டு கல் முனை கல்வி வலய சாய்ந்த மருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட் டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர் அவர்களின் ஆலோசனை வழி காட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு கள பணி யாளர்கள் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாவதையிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலை வளாகங்களையும் சுத்தப்படுத்தும் தேசிய டெங்கு ஒழிப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக, சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன ஏற்கனவே ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

தேசிய டெங்கு ஒழிப்பு திட்டத்தின் அறிவுறுத்தலுக்கமைய, உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், தற்போது மழையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைகின் றது. இந்நிலையில், நுளம்புப் பெருக்கத்துக்கு சாதகமான சூழல் உள் ளதாகவும் அவர் தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# ஜப்பான் நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்கள் 62 பேர்!

## கடும் குளிர், மழை மீட்புப் பணிகளுக்கு இடையூறு

ரோக்கியோ, ஜன. 04

**ஜப்பானில் புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளதுடன் தொடர்ந்து மீட்புப் பணிகள் தொடர்கின்றன.**





நிலநடுக்கத்தால் வீடுகள் இடிந்து விழுந்து, கட்டடங்கள் தீப்பிடித்து, சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளதால் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மத்திய ஜப்பானில் உள்ள நோட்டோ தீபகற்பத்தில் 7.6 ரிச்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. நோட்டோ தீபகற்பத்தில் சுமார் 3,000 மீட்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலிகொப்டர் ஆய்வுகள் தீ விபத்துகள், கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள விரிவான சேதத்தை அவதானித்துள்ளன.

ஜப்பானிய நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்த மக்கள் தற்போது கடும் மழை மற்றும் கடும் குளிருடன் கூடிய காலநிலையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று புதன்கிழமை கனமழை பெய்யும் என்றும், நிலச்சரிவு அச்சத்தை அதிகரிக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மேலும் பலரை மீட்பதற்கான முயற்சிகள் இதனால் பாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

எனினும் நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்தவர்களுக்கு ஜப்பான் இராணுவம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

(அ)



# தன்னை கடித்த எலியை கடித்து குதறிய மாணவி வைத்தியசாலையில் அனுமதி!

பீஜிங், ஜன. 04

சீனாவில், தன்னைக் கடித்த எலியை தானே கடித்துக் கொன்ற கல்லூரி மாணவி, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தின் வூசிச் பகுதியைச் சேர்ந்த 18 வயது நிரம்பிய மாணவி ஒருவர், அங்குள்ள தனியார் கல்லூரியில் படித்து வருகிறார். இந்த நிலையில் அவர் விடுதியில் தன்னுடைய அறையில் இருந்தபோது, அவரை எலி ஒன்று கடித்துள்ளது.

இதனால் அந்த மாணவி வலியால் துடித்துள்ளார்.

இதையடுத்து அதைப் பழி வாங்க நினைத்துள்ளார். இதனால் தன்னைக் கடித்த எலியைப் பிடித்து அதன் கழுத்தைக் கடித்து, தனது கோபத்தைத் தீர்த்துக்கொண்டார். அந்த மாணவியின் வெறித்தனமான கடியால் அந்த எலி பரிதாபமாக உயிரிழந்தது.

எலி கடித்ததில் காயம் அடைந்த அந்த மாணவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருடைய இந்தச் செயலைக் கண்டு வைத்தியரே அதிர்ச்சியடைந்தார். எனினும், அவருக்கு உடனே ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மருத்துவமனையில் அந்த மாணவிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்த மாணவி நலமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)



# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு: ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

ஜகார்த்தா, ஜன. 04

இந்தோனேசியாவின் கிழக்கிலுள்ள ஓர் எரிமலை குமுறி வருவதை அடுத்து 2,000 த்திற்கும் மேற்பட்டோர் தற்காலிகக் காப்பிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு நுசா தெங்கரா மாநிலத்திலுள்ள மவுன்ட் லெவொடோபி லாகி-லாகி என்ற அந்த எரிமலை அண்மைய வாரங்களில் பலமுறை குமுறியது.

புத்தாண்டு நாளன்று ஒன்றரை கிலோமீற்றர் தொலைவிற்கு அது சாம்பலைக் கக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றும் அது குமுறியதாகப் பதிவானது.

லெவொடோபி எரிமலை வெடிப்பால் பிரான் சேடா விமான நிலையம் ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகம் தெரிவித்தது. அவ்விமான நிலையம், எரிமலையிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கடந்த டிசெம்பரில் சுமத்ரா தீவிலுள்ள மவுன்ட் மெராப்பி எரிமலை வெடிப்பால் 23 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் கிட்டத்தட்ட 130 எரிமலைகள் உயிர்ப்புடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.

(அ)

# வெளிநாட்டு மாணவர்களுக்கு பிரிட்டனில் கடும் நெருக்கடி!

## இலங்கை மாணவர்களுக்கும் பாதிப்பு

லண்டன், ஜன. 04

பிரிட்டனில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் பெரும்பாலானோர் தங்கள் குடும்பத்தினரை உடன் அழைத்துச் செல்ல பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்துள்ளது. இந்தத் தடை 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

குடியேற்ற எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் ஜேம்ஸ் கிளவர்லி குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்தத்தில், 300,000 பேர் பிரிட்டனுக்கு வருவதைத் தடுப்பதே இந்த உத்தியின் நோக்கம் என்றும் அவர் சொன்னார். இந்தத் தடையால் இந்திய மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவர் எனக் கூறப்படுகிறது. ஏனெனில், பிரிட்டனில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் இந்தியர்களே அதிகம்.



இந்நிலையில், இந்தக் கடும் கட்டுப்பாடுகள் குறித்து வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர். குறுகிய கால இலாபத்திற்காக வெளிநாட்டு மாணவர்கள் மீது இத்தகைய கடும் கட்டுப்பாடுகளை விதிப்பது நீண்டகால நோக்கில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று 'பிரகோமன் இமிகிரேஷன் லாயர்ஸ்' நிறுவன இயக்குநர் நவோமி கோல்டுஸ்டீன் கூறினார்.

இதனால், தங்கள் மனைவி, பிள்ளைகளோடு இருக்கும் மாணவர்கள் தங்கள் கல்விக்காக வேறு நாடுகளை நாடலாம் என்றார் அவர்.

இதேவேளை, இலங்கையில் இருந்து சென்றும் அதிகளவான மாணவர்கள் பிரித்தானியாவில் கல்வி கற்று வருகின்றனர். அவர்களுக்கு இந்த புதிய தடைகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அங்கு கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# இஸ்ரேலின் ஆளில்லா விமானத் தாக்குதலில் ஹமாஸின் துணைத் தலைவர் உயிரிழப்பு!

பெய்ரூட், ஜன. 04

லெபனானின் பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் சலே அல் அருரி கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது லெபனானில் உள்ள ஹமாஸ் அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று கூறப்படுகிறது. கான் யூனிஸ் தலைமையகத்தில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஐந்து பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக பாலஸ்தீனிய செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை நடத்துவதற்கு முன்னர், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மேற்குக் கரையில் உள்ள ஹமாஸ் அமைப்பின் தலைவரான அல்-அருரியைக் கொன்றுவிடுவோம் என அச்சுறுத்தியுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

என்றாலும், தற்போது பெய்ரூட் தாக்குதலை தங்கள் படைகள் நடத்தியதா என்பது குறித்து கருத்து தெரிவிக்க இஸ்ரேலிய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இக்கொலை இஸ்ரேலின் கோழைத்தனமான கொலை என்று ஹமாஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. "எமது மக்களின் விருப்பத்தையும் உறுதியையும் உடைப்பதில் அல்லது அவர்களின் தைரியத்தை இல்லாதொழிக்கும் செயல்பாடு வெற்றியடையாது" எனவும் ஹமாஸ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# தேர்தலை இலக்காகக் கொண்டு நாட்டில் இனவாதத்தை தூண்டும் அரசியல்வாதிகள்

## நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜன. 04**

**பிறந்திருக்கும் புது வருடம் தேர்தல் ஆண்டு. அதனால் தேர்தலை இலக்காக்கொண்டு நாட்டுக்குள் இன, மத, மொழிப் பிரிவினையை உருவாக்க சுயநல அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

2024 புதுவருடத்தில் கடமை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நீதி அமைச்சு வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தினமவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயக சமூகத்தில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி, அமைதியான தேசத்தை அமைக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரச ஊழியர்கள் என்றவகையில் நாங்கள் ஒவ்வொரு வருடமும் உறுதிப்பிரமாணம் வழங்கினாலும் அரச ஊழியர்கள் தொடர்பில் மக்கள் மத்தியல் நல்லெண்ணம் இல்லை.

என்றாலும் நீதி அமைச்சின் அதிகாரிகளாக நாங்கள் நாட்டில் இருக்கும் முன்மாதிரியான அமைச்சு என்பதை மக்கள் மத்தியிலும் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

அத்துடன் உலகில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாடுகளை பார்க்கும்போது இந்தளவு குறுகிய காலத்துக்குள் ஸ்திரநிலைக்கு வந்த வேறு நாடு இல்லை.

எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் கீழ் நிலைக்கு வீழ்ச்சியடைந்தது. நாங்கள் தற்போது பொருளாதாரத்தை கட்டியெழுப்பி சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

2023ஆம் ஆண்டும் ஜீ.எஸ்.பி பிளஸ் நிவாரணத்தை பெற்றுக்கொள்ள மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணையை பெற்றுக்கொள்ள தேவையான முக்கியமான அளவுகோல்களை பூரணப்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டது நீதி அமைச்சாகும்.

மேலும் 2024ஆம் வருடத்துக்குள் 60 புதிய சட்ட மூலங்களை அனுமதித்துக்கொள்ள தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்-என்றார். (அ)

# பொதுக் கழிப்பறை கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 04

புதிய வரித் திருத்தங்கள் அமுலுக்கு வந்துள்ள நிலையில், பொதுக் கழிப்பறைகளைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீர் கட்டணம் அதிகரிப்பு காரணமாகவே இவ்வாறு பொதுக் கழிப்பறைக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கழிப்பறைகளை பயன்படுத்துவதற்கு இதுவரை வசூலிக்கப்பட்ட கட்டணம் பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 20 ரூபாயாக இருந்த கழிவறை கட்டணம் புதிய திருத்தத்தின் கீழ் 30 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தாண்டு தினத்தன்று கதிர்காமம் சென்ற மகிந்த

கொழும்பு, ஜன. 04

வரலாற்றுச் சிறப்புமிக்க ருஹுணு மகா கதிர்காம விகாரையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் சமய வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

புத்தாண்டு தினத்தில் ஆசிர்வாதம் பெறும் நோக்கிலேயே அவர்கள் கதிர்காமத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

கிரிவெஹர முதல்வர் கலாநிதி கொபவக்க தம்மிந்தவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில் இந்த இரவு முழுவதும் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் ஜகத் புஷ்பகுமார, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, பண்டு பண்டாரநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# சஜித்துடன் இணைந்தது ஏன்?

## ஷான் விஜயலால் விளக்கம்

கொழும்பு, ஜன. 04

மக்கள் கோரிக்கைக்கு செவிமடுக்காமல் பயணிக்கும் இந்த அரசை மாற்ற வேண்டும். அதற்காக பாரியதொரு அரசியல் சக்தி அவசியம். அதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தேன்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக் கட்சியின் தலைமையுடன் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. எனினும், தற்போதைய அரசை மாற்றுவதற்கு மக்கள் சக்தி அவசியம். மக்கள் ஆதரவு சஜித்துக்கு உள்ளது. எனவேதான் இந்த பொது பயணத்தில் நானும் இணைந்தேன்.

சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் மேலும் சில உறுப்பினர்கள் இணைவார்கள் என நம்புகின்றோம்.

தற்போதைய அரசு மக்கள் மீது சுமைகளை திணிக்கின்றது. மக்களின் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படவில்லை. மாற்றமொன்று அவசியம். அதனை ஏற்படுத்த ஒன்றிணைய வேண்டும்-என்றார். (அ)

# உயர்தரப் பரீட்சைக்கான அட்டவணையில் மாற்றம்

கொழும்பு, ஜன. 04

2023 ஆண்டுக்கான உயர்தர பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் உயர்தர பரீட்சை அட்டவணையில் புதிய மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து மாணவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர விண்ணப்பதாரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

இம் முறை புதிய பாடமாக கொரிய மொழி சேர்க்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக அட்டவணையில் சில சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, பழைய அட்டவணையைப் பயன்படுத்த வேண்டாம் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனெனில் சில வலைத்தளங்கள் பழைய அட்டவணையைக் காட்டக்கூடும். பரீட்சாத்திகளின் வசதிக்காக இந்த அட்டவணையை அனுமதிச்சீட்டிலேயே காட்டியுள்ளோம். அதனால் வேறு எந்த தகவலுக்கும் செல்லத் தேவையில்லை.

உங்கள் அனுமதிச்சீட்டு கிடைக்கும் போது முன்பதிவு பிரிவு உள்ளது. அந்த பகுதியில் திகதி, பாட எண், மொழி, நீங்கள் விண்ணப்பித்த பாடங்கள் தொடர்பான பாடத்தின் நேரம் என்பன உள்ளன-என்றார். (அ)

# வவுனியா பொது வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை

வவுனியா, ஜன. 04

வவுனியா பொது வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு தொற்று ஏற்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் வவுனியா வைத்தியசாலையில் 39 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், குறித்த 39 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு சென்று வந்த நிலையிலேயே டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் டெங்கு தொற்று தாக்கம் பெரியளவில் ஏற்படவில்லை.

எனினும், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து டெங்கு தொற்றில் இருந்து தம்மையும், சமூகத்தையும் காக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையமாட்டார் தயாசிறி

கொழும்பு, ஜன. 04

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை பெற்று அக் கட்சியுடன் தான் இணையப் போவதில்லை என்று அறிவித்துள்ளார் சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை சுதந்திரக் கட்சி இடைநிறுத்தியுள்ளது. அத்துடன், மாவட்ட தலைவர், அமைப்பாளர் பதவி என்பனவும் பறிக்கப்பட்டுள்ளன.

எனினும், தான் சுதந்திரக் கட்சியை விட்டு வேறு எங்கும் போகப்போவதில்லை என தயாசிறி ஜயசேகர அறிவித்துவருகின்றார்.

இந்நிலையில் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று முன் தினம் சஜித்துடன் இணைந்தார்.

எனவே, தயாசிறியும் இணையக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையும் அரசியல் கூட்டணியில் ஒரு பங்காளியாக தயாசிறி இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடரும் சுற்றிவளைப்புக்கள்

# 24 மணிநேரத்தில் 1,182 பேர் கைது!

கொழும்பு, ஜன. 04

பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 1,182 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 44 பேர் விளக்கமறியல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருளுக்கு அடிமையான 47 சந்தேகநபர்கள் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 138 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 287 கிராம் ஹெரோயின், 246 கிராம் ஐஸ் போதைப்பொருள், 5.4 கிலோ கிராம் கஞ்சா, 119 போதைப்பொருள் மாத்திரைகள் மற்றும் 19,052 கஞ்சா செடிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதற்காக அவசர தொலைபேசி இலக்கமொன்றையும் பொலிஸார் அறிமுகம் செய்துள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் கீழ் இந்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, போதைப்பொருள் பாவனையாளர்கள் அல்லது பாதாள குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தெரிந்தால் 071 859 8800 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொலிஸ் தலைமையகத்தை தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (அ)

## மின்சார...

நாடளாவிய ரீதியில் உள்ள ஆயிரக் கணக்கான மின்சார சபை ஊழியர்கள் மற்றும் மின்சார சபையுடன் தொடர்பு டைய ஆறு சங்கங்களின் உறுப்பினர்க ளும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் பாதுகாப்பு கருதி சம்பவ இடத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (ஐ)

## டெங்கு...

இடம்பெறாதமையால் மன்னார் நகரம் பெரும் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகி யுள்ளது. இந்த நிலையில், சுகாதார அறிவுறுத்தல்களை சுகாதார பிரிவு விடுத்துள்ளது.

இதேவேளை, மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் மருத்துவமனைகளிலும் திண்ம கழிவகற்றல் செயன்முறை முற் றாக முடங்கியுள்ளது. பொது இடங்க ளிலும் மருத்துவமனை சூழலிலும் மருத்துவ கழிவுகள் அல்லாத ஏனைய கழிவுகள் குவிந்துள்ளன.

தற்போது மழைகாலம் என்பதனால் நோய் கிருமிகளின் தாக்கம் அதிகம். டெங்கு நோயை பரப்பும் நுளம்புகளின் பரவல் அதிகமாக காணப்படுகிறது. இதேநேரம் வயிற்றோட்டம், வாந்தி பேதி போன்ற நோய்களும் இந்தக் காலத்தில் அதிகம் பரவ வாய்ப்புள்ளது. தேங்கிக் கிடக்கும் திண்மக் கழிவுகள் இதற்கு வழிசமைத்துள்ளன.

எனவே, பொதுமக்கள், பொது அமைப்புகள் இது விடயத்தில் அக்கறை எடுத்து சிரமதானங்கள் மூலம் தமது பகுதிகளை தூய்மைப்படுத்த வேண்டும் என்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## கச்சதீவு...

அஞ்சலி செலுத்தினார்.

அப்போது, செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கொள்ளையர்களைப் பயன்படுத்தி தமிழக மீனவர்களை தாக்க வேண்டிய அவசியம் இலங்கை அரசாங் கத்துக்கு இல்லை என்றும் கூறினார். (ஐ)

## ரணிலுக்கு...

அறிவித்தது.

இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க எதிர்வரும் 7ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்திலேயே தங்கியிருப் பார்.

இந்த நிலையில், அவரின் வடக்கு மாகாண வருகைக்கு எதிர்ப்பு தெரி வித்து போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன. இந்தப் போராட் டங்களை தடுக்கும் நோக்கில் பாராளு மன்ற உறுப்பினர்களான கஜேந்திர குமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமி கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலி ஸார் தடை உத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தனர். இந்த விண் ணப்பத்தையே நேற்று நீதிமன்றம் நிரா கரித்தது.

இதேவேளை, நீதிமன்றம் செவ் வாய்க்கிழமை பிறப்பித்திருந்த உத்தர வுக்கு அமைய, வழக்கின் 8 ஆவது பிரதி வாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் நேற்று முன்பட்டு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந் தார். (ஐ)

## தமிழரசின் தலைமைக்கு...

டான் தொலைக்காட்சியில் ஒளிபரப் பாகவுள்ள 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சிக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் அளித்த நேர்காணலி லேயே மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராவதற்கு தற்போது போட்டி யிடும் சி. சிறிதரன், ம. ஆ. சுமந்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோரில் யார் பொருத்தமானவர் என்று நினைக்கி றீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேலும், "தமிழரசு கட்சியின் தலைவ ராவதற்கு எனது அபிப்பிராயப்படி சிறிதரன்தான் தகுதியுடையவர். ஆங்கில அறிவு அவருக்குக் குறைவாக இருந்தா லும் அதற்குரிய - சிறந்த மொழிபெயர்ப் பாளர்களை வைத்துக்கொண்டு அவர் தன்னுடைய கடமைகளை சரியாக செய்யக்கூடிய வல்லமை படைத்தவர். அவர் தமிழ் மக்களின் நெஞ்சங்களை அறிந்தவர்.

"தமிழ் மக்களின் அபிலாசைகள், எண்ணங்கள் - குறிக்கோள்கள் - வேண்டுதல்கள் எதிர்பார்ப்புகள் என்ன? என்பதெல்லாம் அவருக்கு தெரிந்த விடயம். ஆகவே, சிறீதரன்தான் தலை வராக வரவேண்டும் என்பது என்னு டைய கருத்து.

"இதேநேரத்தில் என்னுடைய மாண வரை (சுமந்திரன்) பற்றியும் நான் கட்டா யம் கூறவேண்டியிருக்கிறது. அவருக்குத் தலைவராவதற்கான எல்லாத் தகுதிக ளும் இருக்கின்றன. மொழியறிவு, சட்ட அறிவு, பரந்துபட்ட மக்கள் தொடர்பு கள் - நாடு முழுவதும் இருக்கின்றன. ஆனால், அவரிடம் ஆணவமும் அகந் தையும் கூடுதலாக இருக்கின்றது. மக்களை மதிக்கும் தன்மை அவரிடம் இல்லை. இதை நான் கவனித்து இருக்கி றேன். அப்படிப்பட்ட ஒருவரை தலைவ ராக தெரிந்தெடுத்தால் அங்கு சுயநலம் தான் தலைவிரித்தாடும். அதாவது கட்சியை சுயநல காரணங்களுக்காக மாற்றக்கூடும் - பாவிக்கக்கூடும் என்ற அச்சம் எங்களுக்கு உள்ளது. இதனால், அவரை தலைவராக்குவதில் சில சிரமங்கள் இருக்கக்கூடும். இது வருங் காலத்திலே தமிழ் மக்களுக்கு நன் மையை கொடுக்காது என்பது என்னு டைய கருத்து. இதேநேரத்தில், "சுமந் திரன் தன்னைவிட விஞ்சியவர் வேறு ஒருவர் இல்லை - தன்னுடைய மதத்தை விட வேறு மதங்கள் உண்மையாக இருக்கமுடியாது என்றவிதமான கருத்துகளையும் கொண்ட நபர்.

"தமிழரசு கட்சியின் தலைமைக்கு போட்டியிடும் யோகேஸ்வரன், கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர் - நல்லவர். ஆனால், அவர் எந்த வகையிலே வல்ல வர் என்பது எனக்குத் தெரியாது. அவரை மற்ற இருவருடன் சேர்த்துப் பார்க்கும்போது அவர்களின் தரத்துக்கு அவர் வல்லவர் என்று கூறமுடியாது - எனக்கு தெரிந்தவரையில்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவ ரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண் டும் என்ற அவசியம் - கட்டாயம் இருக்கிறது என்ற வகையில் அவரை (யோகேஸ்வரனை) தெரிவு செய்ய வேண்டி வந்தால் அதுபற்றி நான் கூறுவ தற்கு எதுவும் இல்லை. ஆனால், அப் படியில்லை என்றால் மற்ற இருவரி டையே நான் தலைவராகத் தெரிவு செய்வது சிறீதரனை. காரணம், அவர் எல்லோருடனும் சேர்ந்து போகக்கூடிய வர். வேறு கட்சிகளுடன் சேர்ந்து பயணிக்கவேண்டிய அவசியம் ஏற்பட் டால் சிறீதரனால் அது முடியும். சுமந் திரனால் அது முடியாது. ஏனென்றால், அவர் தான் நினைத்தது நடக்க வேண் டும் - தன்னுடன் சேர்ந்து மற்றவர்கள் நடக்க வேண்டுமே தவிர தான் மற்றவர் களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்றால் அவர் வரமாட்டார். ஆகவே, என்னைப் பொறுத்தவரை அப்படி பார்க்கும்போது சிறீதரனே பொருத்த மானவர் - என்றார்.

இந்த நேர்காணலை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ஸ்பொட்லைற் நிகழ்ச்சி யில் முழுமையாகக் காண முடியும். (ஐ)

# ஜனாதிபதியின் வருகைக்கு எதிராக இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம் , ஜன. 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன் றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். அவரின் இந்தப் பயணத்துக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. பொது அமைப்புகள், அரசி யல் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறு திகள் நிறைவேற்றப்படவில்லை என்றும், மக்களின் அபிலாசைகள், அடிப்படைப் பிரச்னைகளை தீர்ப்பதற்கான முயற்சி கள் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்து இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள்,பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாண வர்கள் இணைந்து இந்தப் போராட் டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டம் இன்று மதியம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன் பாக இடம்பெறவுள்ளது என்று தெரிய வருகின்றது. (ஐ)

## அரசுடன்...

பயணமாக இன்று வியாழக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு வருகை தருகி றார். இந்த நிலையில், தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

"ஒருபுறத்தில் நாட்டின் பொருளா தாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண் டும். அதேவேளை, மறுபுறத்தில் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை நாம் காண வேண்டும். இந்த இரண்டு பிரதான விடயங்களும் நிறைவேற வடக்கு - கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான ஆதரவு மிகவும் அவசியமானது.

எனவே, இந்த இரண்டு பணிகளை யும் முன்னெடுக்கின்ற அரசுடன் சேர்ந்து பணியாற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் முன்வர வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குடையின் கீழ் பயணித்தால்தான் பொருளாதார தீர்வையும், அரசியல் தீர்வையும் நாம் விரைவில் வென்றெ டுக்க முடியும் - என்றார். (ஐ)

## யாழ்...

தேவானந்தா கலந்துரையாடினார்.

இதன்போது, போதைப் பொருள் பாவனைக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள் ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறை களும் அதிருப்தியையும் சந்தேகங்களை யும் ஏற்படுத்துகின்றன. சில சந்தர்ப்பங்க ளில் போதைப் பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தை பொலிஸார் வழங்கியுள் ளனர் என்று மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது.

வற் அதிகரிப்பு உட்பட்ட பொருளா தார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயல்பாடுகள் பெரும் தாக் கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் காத்திரமான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

கடற்றொழிலாளர் விவகாரத்தை தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொ ழிலாளர்கள் மற்றும் துறைசார்ந்தோரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இணைந்த செயல்குழுவின் சந்திப்பு மற்றும் இரு நாட்டு அமைச்சர் மட்டத்திலான சந்திப்பு போன்றவற்றில் மேற்கொள்ளப் பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் பேசப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்களின் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கான கடன் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் வற் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் நாடளாவிய ரீதியில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கடற்றொ ழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் இந்த கலந்துரையாடலில் பேசப்பட்டன என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரி வித்தது. (ஐ)

## உயர்தர...

23 ஆயிரத்து 201 பேரும் உயிரியல் தொழில்நுட்பத்துக்கு 11 ஆயிரத்து 377 பேரும் பிற பாடங்களுக்கு 11 ஆயிரத்து 704 பேரும் தோற்றுகின்றனர். (ஐ)

## இன்று...

கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார்.

தொடர்ந்து, நாளை வெள்ளிக் கிழமை ஜனாதிபதி வவுனியா மாவட்டத் துக்கு செல்லவுள்ளார். அங்கு முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்க ளுக்கான அபிவிருத்தி கூட்டத்தில் பங்கேற்பார்.

இதைத் தொடர்ந்து மீண்டும் யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி 7ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்திலேயே தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடுவார் என்று தெரியவருகின்றது. (ஐ)

## மதுபான...

பிரதேசத்தின் சிவில் சமூக மட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட் டன.

மதுபான நிலையத்தை அகற்றக் கோரி கடையடைப்பில் ஈடுபடுவது என்று முன்னர் எடுத்த தீர்மானத்துக்கு அமைய வர்த்தக நிலையங்கள், மற்றும் கல்வி நிலையங்கள் என்பன உடுப்பிட்டி பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை பூட்டப்பட்டன.

இதற்கு சமாந்திரமாக, காலை 9.30 மணிக்கு உடுப்பிட்டி சந்தியில் கண்டன போராட்டம் ஆரம்பமானது. அங்கி ருந்து பேரணியாக சென்ற மக்கள் மது பானசாலை அமைந்துள்ள இடத்தில் தமது எதிர்ப்பை வெளியிட்ட பின்னர், கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு சென்றது.

அங்கும் போராட்டத்தில் ஈடுபட் டவர்கள், பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோரிக்கைகள் அடங்கிய மனுவை கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபனிடம் கையளித் தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, " மூடு... மூடு.... சாராய சாக்கடையை மூடு", "சீரழிக்காதே...சீரழிக்காதே....மாணவ சமுதாயத்தை சீரழிக்காதே"!, "பிரதேச செயலாளரே! நீங்கள் வழங்கிய இடத் திற்குரிய சிபாரிசை உடனடியாக மீளப் பெறுங்கள்", "குடும்ப வாழ்வைச் சீரழிக் கும் மதுக்கடைகளைத் திறக்காதே!", "எங்கள் கிராமத்துக்கு மதுக்கடை வேண்டாம்", "போதையேற்ற தேசமே எங்களின் வருங்காலம்" என எழுதப் பட்ட வாசகங்கள் தாங்கிய பதாகை களை ஏந்தியவாறு அவற்றை கோஷமாக எழுப்பியிருந்தனர்.

இந்தப் பேரணியில் உடுப்பிட்டி மக்கள், மற்றும் அந்தப் பிரதேசத்தின் சிவில் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.நிரோஷ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி கிருபா கிரிதரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி என ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ஐ-02)

ஈழநாடு
Eelanadu

## மின்சார சபை ஊழியர்களின் சகல விடுமுறைகளும் இரத்து!

கொழும்பு, ஜன. 04

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முன் தினம் முதல் மறு அறிவித்தல் வரும் வரை இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் பொறியியலாளர் நரேந்திர டி சில்வா வெளியிட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவசர தேவைகளுக்காக சம்பந்தப்பட்ட கிளை ஃ பிரிவின் ஊடாக நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் ஊழியர்கள் விடுமுறையை எடுக்க முடியும் என்றும் குறித்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜெரோம் பெர்னாண்டோ பிணையில் விடுதலை!

கொழும்பு, ஜன. 04

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றினால் நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

அவர் 5 இலட்சம் ரூபா பிணை மற்றும் தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கடந்த 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# ரயில்வே கடவைக் காப்பாளர் சங்கம் ரணிலின் வடக்கு வருகைக்கு எதிர்ப்பு

### பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ள முடிவு

முல்லைத்தீவு, ஜன. 04

**வடக்குக்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு வடக்கு-கிழக்கு ரயில்வே கடவை காப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாய் 24 மணிநேர பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக வடக்கு கிழக்கு ரயில்வே கடவை காப்பாளர் சங்கத் தலைவர் ரொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.**




முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயத்துக்கு நாம் எதிர்ப்பை தெரிவிகின்றோம்.

நாடு முழுவதும் உள்ள 2064 ரயில்வே கடவை ஊழியர்கள் அடிமைகளாக, நயவஞ்சக முறையில் நடத்தப்படுகின்றனர். மேலும் இவர்களை பொலிஸாரிடமிருந்து விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியே 48 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுப்படவுள்ளோம்.

அதன்படி, இன்று முதல் நாளை மறுதினம் வரையான 48 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுப்படவுள்ளோம். இந்த காலப்பகுதிக்குள் ரயில்வே கடவைகளில் பயணிக்கும் மக்கள் அவதானமாக பயணிக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.

2014 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆறுமாத காலத்திற்குள் அரச திணைக்களங்களில் சேவையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற அடிப்படையில் 2064 ரயில்வே கடவை ஊழியர்கள் உள்வாங்கப்பட்டனர்.

நாள் ஒன்றுக்கு 250 ரூபா என்ற அடிப்படையில் அவர்களின் மாத வருமானம் 7500 ரூபாவாகும். தங்களின் எதிர்காலத்தினையே அரப்பணிக்கு நாட்டு மக்களை பாதுகாக்கின்ற கடமையில் உத்தரவாதமற்ற நிலையில் தொழில் புரிகின்றனர்.

இன்றைய இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் இவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ரயில் கடவை காப்பாளர்கள், ரயில் திணைக்களத்திற்குள் உள்வாங்கப்படுவதோடு, அடிப்படை பிரச்னைகளுக்கும் தீர்வு வழங்கப்பட ஜனாதிபதியின் உடனடி தலையீடு அவசியமாகும்.

இதற்கு தீர்வு எட்டப்படாத சந்தர்ப்பத்தில் இந்த நாடு பாரதூரமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும். குறிப்பாக ரயில்வே திணைக்களத்தின் சேவைகள் ஸ்தம்பிதமடையும் என்பதை வலியுறுத்துகின்றோம்-என்றார். (அ)

# காங்கேசன்துறை-அனுராதபுரதம் ரயில் சேவை 7ஆம் திகதி முதல்!

யாழ்ப்பாணம், ஜன. 04

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் காங்கேசன்துறை-அனுராதபுரம் இடையிலான ரயில் சேவை இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண ரயில் நிலைய அத்தியட்சகர் சுரேந்திரன் தெரிவித்தார்.

ரயில் பாதை திருத்த பணிக்காக காங்கேசன்துறை-கொழும்பு ரயில் சேவை நிறுத்தப்படவுள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகோ முதல் ஓமந்தை வரையான ரயில் புனரமைப்பு திட்டத்தின் முதலாம் பாகம் ஓமந்தை முதல் அனுராதபுரம் வரை கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஆறு மாதங்களுக்கு இடம்பெற்று முடிவடைந்த நிலையில் இப்போது இரண்டாம் பாகமான அனுராதபுரத்தில் இருந்து மாகோ வரையிலான சுமார் 65 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதை புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இந்த புனரமைப்புப் பணிகளுக்காக எதிர்வரும் 6 திகதி முதல் அனுராதபுரம் மற்றும் மாகோவுக்கு இடையிலான 65 கிலோ மீற்றர் ரயில் பாதை மூடப்படுகின்றது. இக்கால பகுதியில் காங்கேசன்துறையிலிருந்து அனுராதாபுரம் வரை இரண்டு ரயில் சேவைகள் இடம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே போல ஏற்கனவே இடம்பெறும் உள்ளூரர் ரயில் சேவைகளும் வழமை போல் இடம்பெறும்.

மேலும் காங்கேசன்துறை-கொழும்பு ரயிலுக்கான முற்பதிவு ஆசனங்களுக்கான பற்றுச் சீட்டுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை முற்பதிவு செய்யப்பட்டுள்ளதன் காரணமாக சாதாரண ரிக்கெட் பயணிகள் மாத்திரம் தமது ரிக்கெட்டுகளை பெற்று பயணிக்க முடியும்-என்றார். (அ)

## கொரோனா தொற்றால் மேலும் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜன. 04

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம், பதவியா பிரதேசத்தை சேர்ந்த குறித்த நபர் சிறுநீரகநோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

அவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

### ஜனாதிபதியின் யாழ். வருகை

## கஜேந்திரகுமார் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக வழக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 04

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 8 பேருக்கு, எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தடை விதித்து உத்தரவு பிறப்பிக்க கோரி யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதை கருதிற்கொண்டு, எட்டு பேரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்வைக்குமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் அவகாசம் வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினது சங்க பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கும் திலித் ஜயவீர

### நிறுவன தலைவர் பதவிகளை இராஜினாமா செய்தார்

கொழும்பு, ஜன. 04

பிரபல தொழிலதிபர் திலித் ஜயவீர, 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினராக உள்ள அனைத்து நிறுவனங்களிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.

'தெரண' தொலைக்காட்சியை நடத்தி வரும் 'பவர்ஹவுஸ்' நிறுவனம், 'அருணா' நாளிதழை நடத்தி வரும் 'லிபேர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிடெட்' உள்ளிட்ட 24 நிறுவனங்களில் இருந்து அவர் இராஜினாமா செய்துள்ளார்.

முழு நேர அரசியலில் பிரவேசித்துள்ள திலித் ஜயவீர எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 'மவ்பிம ஜனதா கட்சியின்' தலைவராக போட்டியிட தீர்மானித்துள்ளார்.

அதற்கான பிரசாரங்களை அவர் நாடு முழுவதும் தீவிரப்படுத்தியுள்ள பின்புலத்திலேயே தாம் வகித்த அனைத்து தலைவர் பதவிகளையும் இராஜினாமா செய்துள்ளார். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அமீர் ஜமால் அதிரடி ஆட்டம் பாகிஸ்தான் 313 ஓட்டங்கள்!

சிட்னி, ஜன. 04

இறுதி விக்கெட்டுக்காக அமீர் ஜமால் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக முதல் இன்னிங்ஸில் 313 ஓட்டங்களை எடுத்தது பாகிஸ்தான் அணி.

பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி சிட்னியில் நேற்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் 313 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது அந்த அணி. அவுஸ்திரேலியா தரப்பில் அணித் தலைவர் கம்மின்ஸ் அசைக்க முடியாத பந்துவீச்சை வீசி 61 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

பாகிஸ்தானை பொறுத்தவரையில் முதல் நாளின் நாயகன் என்றால் அது சகலதுறை வீரராக வளர்ச்சி அடையும் அமீர் ஜமால் என்றால் மிகையாகாது. இவர் 9ஆவது இடத்தில் இறங்கி 227/9 என்ற நிலையிலிருந்து 11ஆவது வீரர் மிர் ஹம்சா (7 ஆட்டமிழக்காமல்) உடன் இணைந்து 86 ஓட்டங்களை கடைசி விக்கெட்டுக்காக சேர்த்தார். 1976ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தொடரில் ஆசிப் இக்பால், இக்பால் காசிம் இணைந்து கடைசி விக்கெட்டுக்காக 87 ஓட்டங்களை சேர்த்ததன் பின்னர், பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா டெஸ்ட் போட்டியில் நேற்று அமீர் ஜமால் - மிர் ஹம்சா கூட்டணி கடைசி விக்கெட்டுக்காக 86 ஓட்டங்களை சேர்த்து சாதனை புரிந்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்றதும் பாகிஸ்தான் அணித் தலைவர் ஷோன் மசூத் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். ஆனால், அணி வீரர்கள் அவரது முடிவுக்கு சாதகமாக செயல்படவில்லை. ஆடுகளத்தில் ஆரம்பகட்ட ஈரப்பதம் இருந்தது. கொஞ்சம் புற்களும் விடப்பட்டிருந்தன. ஆனால், பாகிஸ்தான் அதிர்ச்சி தொடக்கம் கண்டது. அப்துல்லா ஷபிக், அறிமுக வீரர் சயீம் அயூப் ஆகியோர் டக் அவுட் ஆகினர். ஸ்டார்க் வீசிய பந்தில் ஸ்மித்திடம் பிடியெடுப்பாகி வெளியேறினார் அப்துல்லா ஷபீக். இதேபோல், ஹசில்வூட்டின் அற்புதமான பந்தில் அலெக்ஸ் கேரியிடம் பிடியெடுப்பாக பாகிஸ்தான் 4/2 என்று பயம் காட்டியது.

ஷோன் மசூத் (35) பாபர் அசாம் (28) இணைந்து அணியின் ஓட்டத்தை 39இற்குக் கொண்டு சென்ற போது கம்மின்ஸ் வீசிய பெரிய இன்ஸ்விங்கருக்கு துடுப்பாட்டத்தைத் தாமதமாக இறக்கியதால் எல். பி. டபிள்யூ ஆனார். சவுத் ஷகீலும் கம்மின்ஸ் பந்தில் விழ பாகிஸ்தான் 47/4 என்று ஆனது. அணித்தலைவர் ஷோன் மசூத் மிட்செல் மார்ஷின் ஆட்டமிழந்தபோதும் அது முறையற்ற பந்து என்பதால் தப்பித்தார். ஆனால், தவறைத் திருத்திக் கொள்ளாமல் மீண்டும் மிட்செல் மார்ஷின் பந்திலேயே ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் 96/5 என்ற நிலைக்கு சென்றது.

முகமது ரிஸ்வான் இறங்கியதும் ஸ்கொயர் லெக் மேல் ஓர் அபாரமான சிக்ஸரை தூக்கி ஆரம்பித்தவர் அட்டகாசமாக ஆடினார். நிச்சயம் சதமெடுப்பார் என்று பார்த்த நிலையில் 103 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 88 ஓட்டங்களுடன் கம்மின்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஆனால், ரிஸ்வான் - ஆகா சல்மான் ஜோடி 94 ஓட்டங்களை 6ஆவது விக்கெட்டுக்காக சேர்த்தனர். ஆகா சல்மான் 67 பந்துகளில் 8 பௌண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்கள் எடுத்து அற்புதமாக ஆடினார். இவர் ஸ்டார்க்கின் பந்தில் அடிக்க நினைத்து ட்ராவிஸ் ஹெட்டிடம் பிடியெடுப்பாகி வெளியேறினார். சஜித் கான் 15 ஓட்டங்களில் கம்மின்ஸிடம் வீழ்ந்தார். ஹசன் அலியும் கம்மின்ஸின் 5ஆவது விக்கெட்டாக, டக் அவுட் ஆனார். பாகிஸ்தான் 227/9 என்றானது. இருப்பினும் 250 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பாகிஸ்தான் இழந்து விடும் என்று எதிர்பார்த்த நிலையில் அனைவரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் அமீர் ஜமால் வெளுத்து வாங்கிவிட்டார்.

எதிர்முனை வீரர் மிர் ஹம்சாவை வைத்துக் கொண்டு அவரிடம் ஓரிரு பந்துகளை மட்டுமே ஓவரில் ஸ்ட்ரைக்காக கொடுத்து மீதமுள்ள பந்துகளில் இவர் ஓட்டத்தை சேர்க்கத் தொடங்கினார். அதுவும் வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துகளை பௌண்ட்ரிக்கு பறக்க விட்டார், இருமுறை சிக்ஸர்களுக்கும் பறக்க விட்டார். நதன் லயன் ஓவரிலும் இரண்டு சிக்ஸர்கள் விளாசினார். 112 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 82 ஓட்டங்களை விளாசித்தள்ளினார்.

இதன்மூலம் அவுஸ்திரேலிய மண்ணில் பாகிஸ்தான் வீரர் ஒருவர் ஆடிய, அதுவும் 9ஆம் எண் வீரர் ஆடிய மிகச்சிறந்த இன்னிங்ஸாக இது அமைந்தது. இதன்பின் கடைசி விக்கெட்டாக ஜமால் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 313 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா தன் முதல் இன்னிங்ஸில் 6/0. தன் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆடும் வோர்னர் 6 ஓட்டங்களுடன் களத்தில் இருக்கிறார்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)





# வெற்றியுடன் தொடங்கினார் ரபேல் நடால்!

பிரிஸ்பன், ஜன. 04

பிரிஸ்பன் சர்வதேச ரென்னிஸ் தொடரை ஸ்பெயினின் ரபேல் நடால் வெற்றியுடன் தொடங்கினார்.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரில் பிரிஸ்பன் சர்வதேச ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ரபேல் நடால், தரவரிசையில் மூன்றாவது இடத்தல் இருக்கும் ஆஸ்திரியாவின் டொமினிக் தியமுடன் மோதினார். ஒரு மணி நேரம் 29 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நடால் 7-5, 6-1 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றார்.

37 வயதான ரபேல் நடால் கடைசியாக கடந்த ஆண்டு ஜனவரியில் நடந்த அவுஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் தொடரின் 2ஆவது சுற்றில் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகினார். இதன் பின்னர் எந்தவித போட்டிகளிலும் களமிறங்காத அவர், தற்போது பிரிஸ்பன் போட்டியில் களமிறங்கி புத்தாண்டை வெற்றியுடன் தொடங்கி உள்ளார். (ஐ)

# பிரிஸ்பன் ரென்னிஸ் அஸரென்கா வெற்றி




சிட்னி, ஜன. 04

அவுஸ்திரேலியாவில் நடக்கும் பிரிஸ்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் சோபியா கெனின் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

அமெரிக்காவின் சோபியா கெனின் போட்டித் தரவரிசையில் 14ஆவது இடத்திலிருந்த அவர் 5-7, 6-7 (7/9) என்ற செற்களில், உலகின் 113ஆம் நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் அரினா ரோடியோனோவாவிடம் தோற்றார்.

8ஆம் இடத்திலிருக்கும் பெலாரஸின் விக்ரோறியா அஸரென்கா 6-1, 7-6 (10/8) என்ற செற்களில் அனா கலின்ஸ்கயாவை வெளியேற்றினார்.

# பாகிஸ்தானுடனான தொடர்; நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஜன. 04

பாகிஸ்தான் அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் நியூசிலாந்து அணி விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் இருபது- 20 போட்டி வரும் 12ஆம் திகதி ஒக்லாந்தில் உள்ள ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் இந்த தொடருக்கான நியூசிலாந்து அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக உலகக்கிண்ணத் தொடரை தவறவிட்ட வேகப்பந்து வீச்சாளர் மேட் ஹென்றி மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

மேலும், பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரை தவறவிட்ட கேன் வில்லியம்சன் மற்றும் டெவன் கொன்வே ஆகியோர் மீண்டும் அணிக்கு திரும்பி உள்ளனர்.

அணி விவரம்:

கேன் வில்லியம்சன் (அணித் தலைவர் ), பின் ஆலன், மார்க் சாப்மேன், ஜோஷ் கிளார்க்சன் , டெவன் கொன்வே , லக்கி பெர்குசன், மேட் ஹென்றி, அடம் மில்னே, டரில் மிட்செல், கிளென் பிலிப்ஸ், மிட்செல் சான்டனர், பென் சியர்ஸ் , டிம் சீபர்ட் , இஷ் சோதி, ரிம் சௌதி.



# அமெரிக்கா, டொலர் ஆதிக்கத்திற்கு சவால் விடும் சக்தியாக வளரும் 'பிரிக்ஸ்'!



**கிறிஸ்டினா ஜே. ஆர்காஸ்**





2021ஆம் ஆண்டின் ஒரு கட்டத்தில், பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பை உருவாக்கும் வளர்ந்து வரும் நாடுகளாக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை ஒரு அபிலாஷை கொண்ட குழுவாக இருப்பதை மாற்றி, சர்வதேச சமூகத்தில் ஒரு முழு அளவிலான புவிசார் அரசியல் கூட்டமைப்பாக உருவெடுத்தன.

அந்த ஆண்டுதான் இந்த நாடுகள் தங்கள் பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டு வியப்படைந்தன. மேலும், பிரிக்ஸ் இன் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் வாங்கும் திறன் சமநிலையின் அடிப்படையில் ஜி7 கூட்டமைப்பு நாடுகளை விட அதிகமாக இருந்தது .

ஜி7 கூட்டமைப்பானது ஐக்கிய இராஜ்ஜியம், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய வளர்ந்த நாடுகளைக் கொண்டது. இது உலகின் ஏழு பெரிய 'மேம்பட்ட" பொருளாதாரங்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பாகும். உலக வர்த்தகம் மற்றும் சர்வதேச நிதி அமைப்பு ஆகியவற்றில் இவை ஆதிக்கம் செலுத்துகின்றன.

சீனா மற்றும் ரஷ்யா போன்ற பெரிய உலக வல்லரசுகளையும், தென்னாப்பிரிக்கா மற்றும் பிரேசில் போன்ற அவர்களின் கண்டங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளையும் பிரிக்ஸ் உள்ளடக்கியிருந்தாலும், அதன் உறுப்பினர்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நாடுகளுக்கு கடன் கொடுக்கும் உலக வங்கி போன்ற முக்கியமான அமைப்புகளை மேற்கத்திய நாடுகள் கட்டுப்படுத்துவதாக புகார் கூறுகின்றனர்.




எனவே, அவர்கள் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கு "அதிக குரல் மற்றும் பிரதிநிதித்துவம்" மட்டும் கோரவில்லை. மாறாக, ஜனவரி 1, 2024 முதல், அவர்கள் இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துகின்றனர்.

அன்றிலிருந்து, பன்னாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளை நிர்ணயம் செய்யும் போது, இந்த பலதரப்பு கூட்டமைப்பு ஐந்து புதிய உறுப்பு நாடுகளைக் கூடுதலாகப் பெறும். ஈரான், எகிப்து, எத்தியோப்பியா, சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் தான் அவை.

"உறுப்பினர்களின் எண்ணிக்கை விரிவாக்கம் என்பது முன்பிருந்தே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகிறது. இது புவிசார் அரசியல் விவாதத்திற்கான ஒரு மன்றமாக குழுவின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தும். குறிப்பாக சீனா பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்தும் மத்திய கிழக்கில் இருந்து தான் பெரும்பாலான புதிய உறுப்பினர்கள் வருகிறார்கள்," என வளர்ந்து வரும் சந்தை ஆய்வாளராக உள்ள மைக்கேல் லாங்ஹாம் கூறுகிறார்.

"சர்வதேச அரசியல் விவாதம் மற்றும் ஜி7, ஜி20 மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு வெளியே உள்ள சர்வதேச நிறுவனங்களின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துவதில் இந்த கூட்டமைப்பு தன் விரிவாக்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் என்பதும் எதிர்நோக்கத்தக்கது," என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

**அர்ஜெண்டினாவின் முடிவில் திடீர் மாற்றம்**

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த உச்சிமாநாட்டில், அர்ஜெண்டினா இந்த கூட்டமைப்பில் சேர அழைக்கப்பட்டது. ஆனால் அதிபர் தேர்தலில் ஜேவியர் மிலியின் வெற்றி எல்லா விஷயங்களையும் மாற்றியது. அந்த கூட்டமைப்பில் சேரப்போவதில்லை என புதிய அதிபர் அறிவித்துள்ளார்.




அர்ஜெண்டினாவின் இந்த புதிய நிர்வாகம், "ஜனவரி 1, 2024 அன்று அர்ஜெண்டினா குடியரசை பிரிக்ஸ் குழுவில் முழு உறுப்பினராக இணைப்பது பொருத்தமானதாக கருதவில்லை," என்று புதிய அதிபர் மிலி அந்த கூட்டமைப்புக்கு அதிகாரப்பூர்வமாக எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"இது சீனாவுடனான அரசியல் உறவுகளை துண்டிக்க நினைக்கும் அவருடைய விருப்பத்துடன் ஒத்துப்போகிறது. மிலி அமெரிக்க வலதுசாரிகளின் முக்கிய நபர்களை ஆதரிப்பதுடன் அவர்களுடன் நட்பாக இருக்கிறார்," என்று 'அமெரிக்காஸ் சொசைட்டி' பகுப்பாய்வு மையத்தின் நிபுணர்கள் நினைவு கூர்ந்தனர்.

பிரிக்ஸ் வருடத்திற்கு ஒருமுறை முடிவுகளை எடுக்கிறது என்பதுடன் இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒரு வருடத்திற்கு ஒருவராக தலைவர் பதவியை மாறி மாறி பெறுகிறார்கள்.

**ஒரு புதிய உலகளாவிய ஒழுங்கை கட்டமைக்க முயற்சி**

இந்த மன்றத்தின் மூலம் சீனா அடைய விரும்பும் முக்கிய குறிக்கோள் என்னவென்றால், அதன் சக்தியையும், செல்வாக்கையும் குறிப்பாக ஆப்பிரிக்காவில் அதிகரிப்பது தான் என டப்ளினில் உள்ள டிரினிட்டி கல்லூரியின் புவியியல் சார் வளர்ச்சித்துறை நிபுணரான பேராசிரியர் பாட்ரைக் கார்மோடி குறிப்பிடுகிறார். சீனா தெற்குலக நாடுகளில் முன்னோடியாக இருக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

ஆனால், பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினராக உள்ள மற்றுமொரு பெரிய உலக வல்லரசான ரஷ்யாவின் நோக்கம் வேறு.

"ரஷ்யா அதை மேற்கு நாடுகளுக்கு எதிரான அதன் போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கிறது. உக்ரேன் படையெடுப்பிற்குப் பிறகு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை முறியடிக்க அதன் அங்கத்துவம் உதவுகிறது என்று அது நம்புகிறது," என்று லண்டனை தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான சாத்தம் ஹவுஸின் கிரியோன் பட்லர் கூறுகிறார்.

அதேநேரம், ஈரான் அதில் உறுப்பினராக இருப்பது, மேற்கத்திய எதிர்ப்பு தன்மையை அதிகரிக்கக் கூடும் என்றும் பட்லர் கூறுகிறார்.

தற்போது விரிவாக்கப்பட்டுள்ள இக்குழுவிற்கு புதிய பெயர் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் அது "BRICS+" ஆக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

**பிரிக்ஸ் கூட்டமைப்பு ஏன் முக்கியமானது?**

'சர்வதேச நாணய நிதிய கணிப்புகளின்படி, ஜி7 அமைப்பின் 27 வீத உற்பத்தியுடன் ஒப்பிடும் போது பிரிக்ஸ் நாடுகள் 2028 ஆம் ஆண்டில் உலக உற்பத்தியில் 33.6 வீதம் அளவுக்குப் பங்கைக் கொண்டிருக்கும்," என சிங்கப்பூரைச் சேர்ந்த பாங்க் ஆஃப் அமெரிக்கா மெரில் லிஞ்ச் ஆய்வாளர் கிளாடியோ பைரோன் விளக்குகிறார்.

(16ம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையை தளரவிடாமல் புதுவருடத்திற்குள்...!



கலாநிதி
ஜெகான் பெரேரா

வழமையான நம்பிக்கை உணர்வுடன் இல்லாமல் புதுவருடம் பிறந்திருக்கிறது. பெரும்பாலானவர்களுக்கு கலக்கம். பலருக்கு நம்பிக்கையற்றுப் போன மனநிலை.

ஒரு சில பொருட்களைத் தவிர, பெரும்பாலும் சகல பொருட்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கும் 18 சதவீத பெறுமதிசேர் வரியின் விளைவாக ஏற்படக்கூடிய தாக்கமே கடந்த வாரங்களாக மக்கள் மத்தியில் பிரதான பேசுபொருள். எதிர்பார்க்கப்படும் விலைவாசி உயர்வு முன்னர் தாங்கள் அனுபவித்து வந்த வாழ்க்கையை தொடருவதற்கு போதுமான வருமானத்தை கொண்டிராதவர்களுக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது.

விலைவாசி உயர்வு நிலைவரத்தை மேலும் மோசமானதாக்கப்போகிறது. சர்வதேச நிறுவனங்களினாலும் அரசாங்கத்தினாலும் அண்மையில் வெளியிடப்பட்ட தகவல்கள் பிரச்சினையின் உண்மைத்தன்மையை வெளிக்காட்டுகின்றன.

நிலைவரத்தை சீர்செய்வதற்கு பெரிதாக எதையும் செய்துவிடமுடியாது என்பதே அரசாங்கத்தில் உள்ளவர்கள் மற்றும் வர்த்தகத்துறையின் உயர்மட்டங்களில் உள்ளவர்கள் மத்தியில் நிலவும் பொதுவான சிந்தனை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தொடரவேண்டுமானால் பொருளாதார மறுசீரமைப்புக்காக தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பாதையிலேயே தொடர்ந்து பயணம் செய்யவேண்டியது அவசியம் என்றும் அந்த நிறுவனத்தின் ஆதரவு இல்லாவிட்டால் பெருந்தீங்கு ஏற்படும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் தெளிவுபடுத்திிருக்கிறார்.

"அடுத்த நான்கு வருடங்களில் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், காலப்பொருத்தமான ஒரு முறையில் கொள்கைகளை மாற்றுவதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியது ஒரு தொடர்ச்சியான செயன்முறை. அதற்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு தற்போதைய செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக் கவேண்டியது முக்கியமான அம்சமாகும்" என்றும் அவர் கூறினார். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தகைளை நிறைவேற்றுவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளின் விளைவான சுமையை பகிர்ந்துகொள்வது தொடர்பான பிரச்சினை குறித்து பெரிதாக ஆராயப்படவில்லை.

இலங்கையர்களில் உயர்மட்டத்தில் உள்ள ஒரு சதவீதத்தினர் நாட்டின் மொத்த தனிப்பட்ட சொத்துக்களில் 31 சதவீதத்துக்கு உரிமையாளர்களாக இருக்கின்ற அதேவேளை அடிமட்டத்தில் உள்ள 50 சதவீதத்தினர் 4 சதவீதமான சொத்துக்களை மாத்திரமே சொந்தமாகக் கொண்டுள்ளார்கள் என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் புதிய அறிக்கை ஒன்று கூறுகிறது.

சனத்தொகையில் 33. 4 சதவீதத்தினர் கடன்சுமை காரணமாக பெரும் அல்லல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்றும் அது கூறுகிறது.இந்த அறிக்கையில் உள்ள புள்ளிவிபரங்கள் சொத்துக்கள் இல்லாத உழைக்கும் மக்கள் மீது தற்போதைய அரசாங்கத்தினால் திட்டமிட்ட முறையில் திணிக்கப்படும் பொருளாதாரச்சமை பகிர்ந்துகொள்வதற்கு மாற்றுவழிமுறை ஒன்று தேவை என்பதை உணர்த்துகின்றன.

அரசாங்கம் ஓய்வூதிய நிதியங்களான



ஊழியர் சேமலாப நிதியத்தையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தையும் மறுசீரமைப்பதற்கு முடிவெடுத்ததே தவிர அரச வங்கிகளுக்கும் தனியார் வங்கிகளுக்கும் கொடுக்கவேண்டியிருக்கும் கடனை மறுசீரமைப்புக்கு உட்படுத்தவில்லை. இந்த விடயத்தில் மாற்றம் அவசியம். ஆனால் உண்மை விபரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் செய்யப்படுவதாக இல்லை.

பொருளாதார மீட்சியின் சுமையை திணிக்கும் விடயத்தில் அரசாங்கத்தின் தெரிவின் விளைவுகளை குடிசனமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் இறுதியாக செய்யப்பட்ட குடும்ப ஆய்வில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

60.5 சதவீதமான குடும்பங்களின் சராசரி மாத வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று அந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. ஏறத்தாழ 97.2 சதவீதமான குடும்பங்கள் தங்களது செலவினங்களைச் சமாளிக்க குறைந்த பட்சம் ஒரு உபாயத்தையாவது கடைப்பிடிக்கின்றன.75.2 சதவீதமான குடும்பங்களின் உணவுமுறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்ற அதேவேளை 46.4 சதவீதமான குடும்பங்கள் சேமிப்பைக் குறைத்திருக்கின்றன அல்லது சேமிப்புக்களை செலவுசெய்கின்றன.21.3 சதவீதமான குடும்பங்கள் கடன்களை எடுத்திருக்கின்றன அல்லது சொத்துக்களை அடமானம் வைத்திருக்கின்றன.

கடுமையாக உழைக்கின்ற போதிலும் கூட செலவினங்களை சமாளிக்க முடியாமல் தவிக்கும் மக்களின் விரக்தி தணிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

**முதல் நம்பிக்கை**

இரு வருடங்களுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருட்களுக்கு நிலவிய தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வினால் அவலப்பட்ட மக்கள் பொறுமை இழந்து பொருளாதார அனர்த்தத்துக்கு பொறுப்பானவர்களை வீடடுக்கு அனுப்பவேண்டும் என்று கோரி வீதிகளுக்கு இறங்கினார்கள்.

ஒரு நான்கு மாத காலத்துக்கு இலங்கையின் போராட்ட இயக்கமான அறகலய உலகம் பூராவும் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்தது. மக்களின் முயற்சியினால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் ஊழல்தனமான - தோல்விகண்ட அரசாங்கங்களை அமைதியான முறையில் அதிகாரத்தில் இருந்து அகற்றமுடியும் என்றும் வலிமைமிக்க செய்தியை அந்த இயக்கம் உலகிற்கு கூறியது.

ஆனால், விவிலியத்தில் கூறப்பட்டிருப்பதைப் போன்று கெடுதியின் கட்டமைப்புக்கள் மிகவும் ஆழமாக வேரூன்றி யிருக்கின்றன. சுயநலவாதிகளும் ஊழல்வாதிகளும் கல்நெஞ்சக்காரர்களும் அனேகமாக தகர்க்கமுடியாத அதிகார மற்றும் சிறப்புரிமை முறைமைக்குள் தங்களுக்கு வலுவான இடத்தை தேடி ஆழக்காலூன்றியிருக்கிறார்கள்.

கெடுதியின் கட்டமைப்பில் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதுடன் சட்டங்கள் எழுத்தில் இருந்தாலும் அவற்றின் உணர்வு பண்புகள் செயல்வடிவம் பெறாதிருப்பதை உறுதிசெய்து கொள்வதற்காக தவறாகப் பிரயோகிக்கப்படவும் செய்கின்றன.

அண்மைய வழக்குகளில் அரசாங்கத் தலைவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும் என்றும் சித்திரவதை செய்த பொலிஸ்காரர்கள் பதவியில் இருந்து அகற்றப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் எந்த பயனையும் தரவில்லை.

தேர்தல்கள் தொடர்பில் அரசியலமைப்பில் எழுதப்பட்ட சட்டம் மக்களின் ஆணையின் அடிப்படையில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்பது புதுவருடத்தில் நம்பிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது.

இவ்வருடம் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்றும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலும் ஒத்திவைக்கப்பட்ட மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களும் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார்.

அறகலய மக்கள் இயக்கம் அரசாங்க மாற்றம் ஒன்றைச் சாதிக்கத் தவறிவிட்டது. மக்கள் இயக்கத்தினால் சாதிக்க இயலாமற்போனதை சடடத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக பிரயோகத்தினால் சாதிக்கலாம்.ஆனால் இந்த தேர்தல்கள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை ஒன்று நிலவுகிறது. இவ்வருடம் தேர்தல்களை நடத்தாமல் விடுவதற்கு வசதியாக அரசியலமைப்பு மாற்றப்படலாம் என்றும் நிறைவேற்று ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படலாம் என்றும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால், புதிய வருடத்தில் ஒரு பெரிய நம்பிக்கையும் இருக்கிறது. தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வொன்றை அண்மையில் காணக்கூடியதாக இருந்தது. சிவில் சமூகத்தைச் சேர்ந்த குழுவொன்று புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தில் இருக்கும் ஒரு பிரிவினருடன் சேர்ந்து இலங்கையில் உள்ள பௌத்த குருமாருடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

நீண்டகால நெருக்கடிக்கு முடிவைக் காண்பதற்கான முயற்சி குறித்து தங்களது நலன்களை மாத்திரம் கருத்திற்கொண்ட சக்திகளினால் சந்தேகமும் எதிர்ப்பும் கிளப்பப்படுகிறது.சிலர் பயனடைய மற்றையவர்கள் ஒதுக்கப்படக்கூடும் என்ற சந்தேகமே இதற்கு காரணமாகும். இரு தரப்பில் இருந்தும் இமாலயப் பிரகடனத்துக்கு தற்போது காட்டப்படும் வெளிப்படையான கடும் எதிர்ப்பு மேலும் தீவிரமடையக்கூடும். ஆனால் அது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயன்முறையை தடம்புரளச் செய்துவிடக்கூடாது.

**பெரிய நம்பிக்கை**

தற்போதைய தருணம் சமாதானத்துக்கு முன்னேற்றத்தைக் காண்பதற்கு வாய்ப்பானதாகும். தற்போதைய பொருளாதார நெருக்கடி மக்களில் ஒரு பிரிவினருக்கு மற்றைய பிரிவினர் எதிரிகள் அல்லர் என்பதையும் வேறு காரணிகளும் செயற்படுகின்றன என்பதையும் அவர்களுக்கு காண்பித்திருக்கிறது.

மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இளைஞர்கள், இவர்களில் பலர் பல்கலைக்கழக மாணவர்கள் இனங்களுக்கிடையில் பிளவுகளைத் தூண்டிவிடும் அரசியல்வாதிகளினால் ஏமாற்றப்பட்டது போதும் என்று முழக்கங்களை எழுப்பினார்கள். ஆனால் அவர்கள் சகலரும் சமத்துவமாகவும் மதிப்புடனும் நடத்தப்படக்கூடிய புதிய நாடொன்றை வேண்டிநின்றார்கள்.

இதே போன்ற செய்தி இலங்கை சமாதானத்துக்கான மதங்களின் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகாநாடொன்றில் இருந்தும் வந்தது. அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதம பேச்சாளர்.

சகல இன,மத சமூகங்களுக்கான நீதி மீதான பற்றுறுதியை உருவகப்படுத்துபவராக அவர் விளங்குகிறார். மன்னிக்கும் பண்பு கொண்ட அவர் தனது ஒரு கண்ணைப் பறித்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்காக ஒரு முழுச்சமூகத்தையும் பொறுப்பு என்று குற்றஞ்சாட்டி பகைமையைக் காண்பிக்கவில்லை. அவரின் இந்த பண்பு இலங்கையில் உள்ள நாம் நெல்சன் மண்டேலாவை நோக்கத் தேவையில்லை, எம் மத்தியிலேயே அவரைப் போன்றவர் இருக்கிறார் என்பதற்கு சான்றாகும்.

இலங்கை மக்கள் இனவாதிகள் அல்லர், அவர்கள் அரசியல்வாதிகளினால் தூண்டிவிடப்பட்டார்கள் என்று அந்த மகாநாட்டில் உரையாற்றியபோது திருமதி குமாரதுங்க மதிநுட்பத்துடன் கூறினார். தனது பதவிக்காலத்தில் போர் தொடர்ந்து கொண்டிருந்தபோதிலும் கூட இனங்களுக்கு இடையில் அதிகாரப் பகிர்வையும் மாகாண மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றுக்கு சாதகமான முறையில் மக்கள் அபிப்பிராயம் தலைமைத்துவம் மற்றும் அறிவூட்டல் இயக்கம் காரணமாக இரு வருட கால இடைவெளிக்குள் 23 சதவீதத்தில் இருந்து 68 சதவீதமாக அதிகரித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்துக்கான முன்னேற்றம் ஒன்றைக் காண்பதற்கு சிறந்த வாய்ப்பொன்றை இந்த வருடம் வழங்குகிறது. பல தரப்பு இணக்கப்பாட்டுடன் அரசியல் இணக்கத்தீர்வொன்று கைச்சாத்திடப்படவும் அது அரசியலமைப்பில் சேர்க்கப்படவும் வழிசமைக்கக்கூடிய அடித்தளம் ஒன்றையாவது அமைக்ககூடிய வாய்ப்பை உருவாக்க முடியும்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் முன்னெடுக்கவும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கி நாட்டை வழிநடத்துவதற்கு குறுக்கே நிற்பவற்றில் பெரிய தடையை அகற்றவும் தலைமைத்துவத்தை யார் வழங்குவார் என்பது முக்கியமான கேள்வி.

ஒவ்வொரு நெருக்கடியுடனும் சேர்ந்து ஒரு வாய்ப்பும் வந்து சேருகிறது. நீதியையும் சகல தரப்பினரையும் அரவணைக்கும் வளர்ச்சியையும் மேம்படுத்தக்கூடிய தொலை நோக்குடையதும் பல்தரப்பு இணக்கத்துடனானதுமான தலைமைத்துவத்தின் மூலமாக தலைவிதியை மாற்றுவதற்கு 2024 ஆம் ஆண்டு ஒரு முக்கிய காலப்பகுதியாக அமையும்.

# அமெரிக்கா, டாலர் ஆதிக்கத்திற்கு...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது விரிவாக்கப்பட்ட குழுவில் சுமார் 3.5 பில்லியன் மக்கள் அல்லது உலக மக்கள் தொகையில் 45 சதவிகிதம் பேர் உள்ளனர்.

அதன் ஒட்டுமொத்த பொருளாதாரம் 28.5 டிரில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக உள்ளது, இது உலகப் பொருளாதாரத்தில் 28 வீதம் ஆகும்.

உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெயில் 44 வீதம் அளவுக்கு பிரிக்ஸ் நாடுகள் உற்பத்தி செய்கின்றன.

'பிரேசில் போன்ற உத்தி ரீதியான மூலப்பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு நன்மை இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். முதலீடு மற்றும் வர்த்தகத்தில் சீனா முக்கியத்துவம் பெற்றாலும், ஏறக்குறைய அனைத்து வளர்ந்து வரும் சந்தைகளுக்கும் மேற்கத்திய நாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே உள்ளன," என்கிறார் பைரோன்.

பல சந்தர்ப்பங்களில், சவூதி அரேபியாவும் ரஷ்யாவும் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளன .

'தற்போதைய பிரிக்ஸ் பொருளாதாரங்கள் மற்றும் எரிசக்தி பொருளாதாரத்தில் புதிய உறுப்பினர்களின் குரல்களைக் கேட்கும் திறனை இது நிரூபிக்கிறது என்பதுடன் பொருட்கள் மற்றும் அரசியலுக்கு இடையே உள்ள இடைவெளி எவ்வளவு மெல்லியதாக உள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது," என்று ஏஆயு- இன் தலைமைப் பொருளாதார நிபுணர் டான் ஸ்காட் விளக்குகிறார். ஆனால் இக்குழுவிற்குள் எல்லாம் தற்செயல் நிகழ்வுகள் அல்ல.

அவர்களின் புவிசார் அரசியல் செல்வாக்கை அதிகரிப்பது, தற்போதுள்ள உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை மறுவடிவமைத்தல் மற்றும் சவால்களை ஏற்படுத்துதல் என்பதுடன் அமெரிக்க டாலரின் பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற தெளிவான பொதுவான நோக்கங்கள் இருந்தாலும், அனைவரின் புவிசார் அரசியல் நோக்கங்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

"உண்மையில், பிரேசில், இந்தியா மற்றும் தென்னாப்



பிரிக்கா ஆகியவை மேற்கு நாடுகளுக்கு நேரடி சவாலாக பிரிக்ஸ் கருதப்படுவதை எதிர்க்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த குழு சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான ஒரு பாதையாக இருப்பதாக கவலைகள் உள்ளன. புதிய உறுப்பினர்களை அதிகரிப்பது மேலும் சிக்கல்களை அதிகரிக்கும் என்பதுடன் குழுவிலிருந்து வெளிவரும் எந்த பெரிய சீர்திருத்தத் திட்டங்களின் வாய்ப்புகளையும் குறைக்கும்," என்கிறார் லாங்ஹாம்.

"இது சம்பந்தமாக, உள்ளூர் நாணயங்களின் அதிக பயன்பாடு உட்பட உறுப்பினர்களிடையே வர்த்தகம் மற்றும் நிதி உறவுகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். வளர்ந்த சந்தைகளுக்கு சாதகமானதாகக் கருதப்படும் தற்போதைய சர்வதேச நடைமுறைகளை சவால்களை அதிகரிக்கச் செய்யும் சாத்தியம் ஆகியவையும் அடங்கும்."

**அமெரிக்க டாலருக்குப் பதிலாக புதிய நாணயமா?**

இந்த நாடுகள் பெரும்பாலும் தங்களது வர்த்தகத்தில் அமெரிக்க டாலரைப் பயன்படுத்துகின்றன.

பிரேசில் மற்றும் ரஷ்யாவில் உள்ள முக்கிய அரசியல்வாதிகள் டாலரின் ஆதிக்கத்தை குறைக்க மாற்று நாணயத்தை உருவாக்க பரிந்துரைத்துள்ளனர். எனினும், இந்த ஆண்டு ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்படவில்லை.

பிரிக்ஸ் நாடுகள் பொதுவான நாணயத்தை உருவாக்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றது. ஏனெனில் அவற்றின் பொருளாதாரங்கள் மிகவும் வேறுபட்டவை என்று பேராசிரியர் கார்மோடி கூறுகிறார்.

பிரிக்ஸ் தலைவர்களின் கூற்றுப்படி, டாலர் உலகளாவிய அளவுகோலாக அதன் பங்கை நிறைவேற்றவில்லை என்பதுடன் உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மைக்கு ஓரளவு பொறுப்பேற்க வேண்டும். தற்போது, அமெரிக்காவுக்கும், சர்வதேச நாணயமாக திகழும் டாலருக்கும் சவால் விடும் உலகளாவிய சக்தியாக பிரிக்ஸ் எழுந்து நிற்கிறது.

"எனினும் டாலரின் மேலாதிக்கத்துக்கு பிரிக்ஸ் சவால் விடும் என்ற கவலை தற்போது மிகைப்படுத்தப்பட்டதாக தோன்றுகிறது. உறுப்பு நாடுகளிடையே நிலவும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட புவிசார் அரசியல் நோக்கங்கள் மற்றும் அவர்களின் மாற்று விகிதங்கள் அல்லது பொருளாதார அரசியலில் எந்தவித கட்டுப்பாட்டையும் இந்த நாடுகள் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை" என்று லாங்ஹாம் தெளிவுபடுத்துகிறார்.

**பிரிக்ஸ் தலைவர் பதவியை ரஷ்யா எவ்வாறு பயன்படுத்தும்?**

ரஷ்யா அக்டோபரில் கசானில் இந்த ஆண்டுக்கான பிரிக்ஸ் உச்சி மாநாட்டை நடத்தவுள்ளது. விளாடிமிர் புடின், ரஷ்யாவின் தலைமைப் பொறுப்பை கீழ்கண்டவற்றிற்காகப் பயன்படுத்தப் போவதாகக் கூறினார்:

சர்வதேச நிதி அமைப்பில் பிரிக்ஸ் அமைப்பின் பங்கை அதிகரித்தல்.

வங்கிகளுக்கு இடையே ஒத்துழைப்பை வளர்த்து, பிரிக்ஸ் நாணயங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்துதல்.

வரி மற்றும் சுங்க அதிகாரிகளுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

"ரஷ்யா உக்ரேன் மீது படையெடுத்த போதிலும் பிரிக்ஸ் உடன், உலகின் பிற நாடுகளில் தனக்கு இன்னும் நண்பர்கள் மற்றும் நட்பு சக்திகள் இருப்பதை மேற்கத்திய நாடுகளுக்கு காட்ட ரஷ்யா விரும்புகிறது" என்று லண்டனை தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனத்தின் ஐரீன் மியா கூறுகிறார். -●

